அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஜெபவீரர் களம்

JEBAVEERAR KALAM

கர்த்தருடைய யுத்தங்களை நடத்து!

களம் - 6 | ஜுன் - 2026 | யுத்தம் - 6 | தனிப்பிரதி ரூ. 20/- | ஆண்டு சந்தா ரூ. 200/-

VOLUME - 6 | JUNE- 2026 | ISSUE - 6 | MONTHLY SUBSCRIPTION RS.20/- | YEARLY SUBSCRIPTION RS.200/-

**நீங்கள் ஜெபம்பண்ணும்போது**
எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ,
அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று
**விசுவாசியுங்கள்,**
**அப்பொழுது அவைகள் உங்களுக்கு**
**உண்டாகும் என்று சொல்லுகிறேன்.**
**மாற்கு 11 : 24**



ஆசிரியர். J.ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

**கிறிஸ்துவுக்குள் அன்பான என் சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி ஜூன் மாத இதழை உங்கள் கைகளில் வாசிக்க தருவதில் மகிழ்கிறேன். தனித்து தேவனோடும் தேவமனிதர்களின் ஐக்கியத்தோடும் தனித்துவமாக உங்கள் காலங்களை பயன்படுத்திக்கொள்ள அழைக்கிறேன்.**

கூட்டத்தோடு நிற்பது மனிதத் தன்மை, தேவனுக்காகத் தனித்து நிற்பதோ தெய்வத் தன்மை. சாதாரண மனிதர்கள் தமது சக மனிதர்களைப் பின்பற்றி, கடல் அலையைப்போல நிலையற்ற வாழ்க்கை வாழ்வார்கள். ஆனால், உலக வாழ்வுக்கு எதிர் நீச்சலிட்டு இறைக்கொள்கையை உறுதியாகப் பின்பற்றுபவர் தனித்து நிற்பவராவார். உலகம் தரும் இலாபத்திற்காகவும், சுகபோகத்திற்காகவும் மனச்சாட்சியை மழுக்கி, சமூக மற்றும் சமயப் பகட்டுகளைப் பின்பற்றுவது மனித இயல்பு. இவையனைத்தையும் உதறிவிட்டு சத்தியம் மற்றும் கடமை என்னும் பலிபீடத்தின் மேல் ஏற்றி பலியிடுவதே தேவ பக்திக்கான வாழ்வாகும்.

நோவா பேழையைக் கட்டி, தனித்து பயணித்தான். மழையையோ வெள்ளத்தையோ காணாத அவனைப் பார்த்து உற்றார் உறவினர்கள் நகைத்தனர், பரிகசித்தனர். முடிவிலோ அவர்களே மரித்துப் போனார்கள். ஊர் தேசத்தில் வாழ்ந்த ஆபிரகாமோ, ஊரோடு சேராமல், அந்நியனாய் சஞ்சரித்து, தனித்து தேவனை ஆராதித்தான். ஆனால், கூட்டமாக வாழ்ந்த கொடிய சோதோம் கொமோரா மக்களோ அக்கினிக்கு இரையாகினார்கள். ராஜ அரண்மனையில் இருந்தாலும், தானியேல் தனித்தே ஜெபம் செய்து, தனியாய் உணவருந்தினான். ஜெயம் பெற்றான். பிற மத பொய்த் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தின் நடுவே, எலியா தனித்து பலியிட்டு ஜீவனுள்ள தேவனுக்கு சாட்சி பகிர்ந்தான். எரேமியா தனித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து தனிமையில் அழுது புலம்பினான். உயிர்தப்பினான். கூட்டத்ினரோ சிறைபிடிக்கப்பட்டு பட்டயத்திற்கு பலியானார்கள்.

முழு உலகத்தையும் அன்புகூர்ந்த இயேசு கிறிஸ்துவோ தனித்தே மரித்தார். இப்படிப்பட்ட தனிமையின் பாதையில்தான் தமது சீடர்கள் நடக்க வேண்டும். (''கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்'' மத். 7:13).

எனவே இந்த நாட்களில் அமர்ந்து இருந்து நம்மை நாமே நிதானித்து கொள்வோம். தேவ பிரசனத்தில் நிறைவோம். அதிகமாக சரிசெய்ய வேண்டிய பகுதிகள், மனம் திரும்ப வேண்டிய இடங்கள் என்ன என்பதை ஆராய்ந்து செப்பனிடுவோம். உலகத்தின்மீது மயக்கம் கொள்ளாமல் விழித்து இருப்போம். நம்மால் அக்கினியில் இருந்து தேவ சித்தத்தின்படி காப்பாற்றப்பட வேண்டியவர்களை நாம் புத்தி உள்ளவர்களாக இருந்து சரியாக காப்பாற்ற, விசேஷமாக நமது மந்தை, மற்றும் குடும்பத்தினரை காப்பாற்ற கவனம் கொள்வோம்.

கர்த்தர் தாமே சீக்கிரமாக இதையும் கடந்து போக வைப்பார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்முடன் இருப்பதாக!

கிறிஸ்துவின் மகிமையான பணியில்

(போதகர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை)




ஆவிக்குரிய போஷாக்கு அளிக்கும் தினதியானம் (Daily Devotion) மாத சஞ்சிகை

அன்றன்றுள்ள அப்பம்

மன்றாட்டு வீரர்களின் முழங்கால்களையும் ஆத்துமாவையும் வலுவாக்கும் மாத சஞ்சிகை

ஜெபவீரர் களம்

இளஞ்சிறார்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தவும் சீடராக்கவும் உதவும் சிறுவர் சஞ்சிகை.

ஒலிவமரக் கன்றுகள்



ஆக்கம்:

அன்றன்றுள்ள அப்பம்
50 ரயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம்
சென்னை-600024.
தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி
044 24840407
+91 9884908777
+91 9884916777
+91 9003067777

# அன்பே பெரியது!

***‘‘இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது’’ (1 கொரி. 13:13).***

எல்லா கணக்கிற்கும் ஒரே விதியைப் (FORMULA) பயன்படுத்தி விடையை கண்டுபிடிக்க வேண்டுமென்று கணக்கு பாடம் படிக்கும் மாணவனிடம் கூறினால், அவனால் விடையை கண்டுப்பிடிக்க முடியுமா? எல்லா நோய்களுக்கும் ஒரே மாத்திரையை எழுதிக்கொடுங்கள் என்று டாக்டர்களிடம் கேட்டால், அவரால் எழுதிக் கொடுக்க முடியுமா? எல்லா குற்றத்திற்கும் ஒரே தண்டனையை நீதிபதியால் கொடுக்க முடியுமா? எல்லா வீட்டிற்கும் அரசாங்கத்தால் ஒரே கதவு எண்ணைக் கொடுப்பது சாத்தியமா? இவைகள் அனைத்தும் சாத்தியமற்றவைகளாயிருக்கும்போது, எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வு கொடுப்பது எப்படி சாத்தியமாகும்?

ஆனால் முழு உலகத்திலும் உள்ள அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வு உண்டு. அது **‘‘அன்பு’’** என்ற ஒரே வார்த்தைதான் தீர்வு.

பரிசுத்த வேதாகமத்திலே மத்தேயு 22ம் அதிகாரத்தை வாசிக்கும்போது, அங்கே ஒரு நியாய சாஸ்திரி இயேசுவினிடத்தில் வந்து, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான்.

அதற்கு இயேசு, ***‘‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்றார்.’’***

திருவள்ளுவர் என்ன சொல்கிறார் பாருங்கள்:

‘‘அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’’

இதற்கு அர்த்தம் என்னவென்றால் அன்பில்லாதவர்கள் எல்லாம் என்னுடையது என்னுடையது என்று உரிமை பாராட்டுவார்கள். ஆனால், அன்புடையவர்களோ, தம்முடைய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்துமே மற்றவர்களுக்கென்று எண்ணிவிடுவார்கள்.

இந்த அன்பு என்பது ஒரு தெய்வீக மொழி. இந்த அன்பு என்பது ஒரு உணர்ச்சி. இந்த உணர்ச்சியை பலரும் பலவிதமாக வெளிப்படுத்துவார்கள். உலகத்தில் யார் உண்மையாக அன்பு செலுத்துகிறார்கள் என்று கேட்டால், ஒரு தாய், தான் பெற்ற குழந்தையிடம் காட்டும் அன்பே உண்மையானது என்று சொல்லலாம்.

தாய் என்பவள் குழந்தை கருவிலே உருவாகுவதற்கு முன்பே அன்பு செலுத்த ஆரம்பித்து விடுகிறாள். ஒன்பது மாதங்கள் மற்றும் பத்து நாட்களாக குழந்தையை பாதுகாத்து, ஒரு மனிதன் பொறுத்துக்கொள்ளும் வலியைவிட பலமடங்கான வலியை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, குழந்தையை பெற்றெடுக்கிறாள். குழந்தை பெற்றெடுத்தபின் அவளுடைய இரண்டு கண்களில் ஒரு கண் எப்போதுமே குழந்தை மேல்தான் பதிய வைத்திருப்பாள். மற்றொரு கண்ணை தன்னுடைய அன்றாட வேலை மீது வைக்கிறாள். தனக்கு உணவு இல்லாவிட்டாலும், குழந்தை நன்றாக சாப்பிட வேண்டுமென்று நினைத்து அதற்கு தேவையான உணவை, தேவையான நேரத்தில் கொடுத்து அதின் பசியை போக்குகிறாள். தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை முழுவதுமாக தன் குழந்தைக்காக தியாகம் செய்கிறாள். குழந்தை ஏதாவது தவறு செய்துவிட்டால், தாய் அடிக்கும் அடிகள் கூட ஒரு அன்பின் உணர்ச்சியாகும். தன்னுடைய பிள்ளை வளர்ந்து திருமணம் செய்த பின்பும் தாய் தன் பிள்ளையை குழந்தையாகவே பார்க்கிறாள். ஒரே வரியில் தாயின் அன்பை விவரிக்க வேண்டுமென்றால் **‘‘தாயின் அன்பிற்கு எல்லைகளே இல்லை’’** என்று சொல்லலாம்.

இந்த அன்பைக் குறித்து பரிசுத்த வேதாகமத்திலே, *1* கொரிந்தியர் *13*ம் அதிகாரத்தில், *1* முதல் *13* வசனங்களை பரி. பவுல் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்.



போதகர்.
**J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**
அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள்

அவர் சொல்லுகிறார் ***''நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்'' (1 கொரி. 13:1).***

இந்த அன்பைக்குறித்து இந்த 1 கொரி. 13ம் அதிகாரத்திலே பவுல் சொல்கிறார்:

1) அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது, 2) அன்புக்குப் பொறாமை இல்லை, 3) அன்பு தன்னைப் புகழாது, 4) அன்பு இறுமாப்பாயிராது, 5) அன்பு அயோக்கியமானதைச் செய்யாது, 6) அன்பு தற்பொழிவை நாடாது, 7) அன்பு சினமடையாது, 8) அன்பு தீங்கு நினையாது, 9) அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், 10) அன்பு சகலத்தையும் தாங்கும், 11) அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், 12) அன்பு சகலத்தையும் சகிக்கும், 13) அன்பு ஒருக்காலும் ஒழியாது.

நீங்கள் கலாத்தியர் 5:22, 23ஐ வாசிக்கும்போது அங்கே 9 ஆவியின் கனிகளை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. அவைகள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இந்த 9 ஆவியின் கனிகளிலே மகவும் சுவையானது ''அன்புதான்.'' இந்த அன்பை வைத்துதான் மற்ற கனிகளெல்லாம் ஆரம்பமாகிறது. நாம் காட்டும் அன்பு மூலமாக நம்முடைய சத்ருக்களை சிநேகிக்கலாம், மற்றவர்களிடத்திலும் அன்பு பாராட்டும்போது, அவர்கள் எப்படிப்பட்ட கல் மனது உள்ளவர்களாயிருந்தாலும், அடிமேல்அடி வைத்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியின்படி, அவர்களையும் நாம் ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்.

இந்த உலகப்பிரகாரமான அன்புகளையெல்லாம் தராசின் ஒரு பக்கத்தில் வைத்து, 1 கொரி. 13-ம் அதிகாரத்திலுள்ள தெய்வீக அன்பை மறுபக்கத்தில் வைத்தால், உலக அன்புகளெல்லாம், குறைவானதாகவே காணப்படும். அவைகள் ஒரு போதும் கிறிஸ்துவின் அன்போடு ஒப்பிடமுடியாது.

இந்த சுயநலமான அன்பின் தன்மை என்னவென்றால், எல்லாம் எனக்கு வேண்டும், நான் மற்றவர்களுக்கு ஒன்றும் கொடுக்க மாட்டேன் என்று எதிர்பார்க்கிறது. ஆனால், தெய்வீக அன்போ, எனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நான் என்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் தியாகமாக மற்றவர்களுக்கு வாரி வழங்குவேன் என்பதாகும்.

## உலகில் நடக்கும் பிரச்சனைகளுக்கு என்ன காரணம்?

இந்த உலகத்தில் நடக்கும் எல்லா பிரச்சனை களுக்கும் ஒரே காரணம் அன்பில்லாமை. இன்றைக்கு உலகத்தில் பசி, யுத்தம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபச்சாரம், துரோகம் போன்ற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே காரணம் அன்பில்லாமை. பசியால் தெருவில் வாடும் குழந்தைகளை பார்த்து மனமிரங்காதவன், தான் பெற்ற குழந்தை பசியோடு வாட அவன் அனுமதிப்பதில்லை.

ஒரு இராணுவ வீரன் எதிரி நாட்டின் படைவீரனை இரக்கமின்றி சுட்டுக் கொல்கிறான். அதே நேரத்தில் அவன் தன் குடும்பத்தாரிடம் இரக்கம் காண்பிக்கிறான். கொலை செய்வதையே தொழிலாக வைத்திருக்கும் ஒரு கொலைகாரன், தன் குடும்பத்தாரை மிகவும் நேசிக்கிறான். கொள்ளையடிக்கும் தொழிலை செய்கிறவன் தன் குடும்பத்தினர் மத்தியிலே நல்லவனாக வாழ்கிறான். வீட்டிற்கு வெளியே விபச்சாரம் செய்கிறவன், வீட்டிற்குள் இருக்கும் போது பரிசுத்தவானாக வேஷம் போடுகிறான். பிறருக்கு துரோகம் செய்கிறவன், தனக்கு நெருக்கமானவர்களிடத்தில் உண்மையோடு இருக்கிறான்.

அப்போ இந்த உலகத்தில் அன்பில்லாதவன் ஒருவனும் இல்லை என்று சொல்லலாமா? கூடாது. இந்த உலகத்தில் அன்பில்லாத மனிதன் ஒருவனும் இருக்க முடியாது. காரணம் அவனிடத்தில் காணப் படுவது மாய்மாலமான அன்பு, பாரபட்சமான அன்பு. இதுதான் இந்த உலகத்தில் நடக்கும் எல்லா பிரச்சனை களுக்கும் காரணம்.



அடுத்த வாரம் அதே கடைக்கு சென்று அந்த ஜவுளிக்கடைக்காரனிடம் ஒரு நல்ல சட்டையை காண்பியுங்கள் என்றான். கடைக்காரரும் அவன் போன வாரம் வாங்கிச் சென்ற சட்டையை போன்றே வேறு சட்டையைக் காண்பித்தார். உடனே அந்த வாலிபன் இவ்வளவு விலை குறைந்த சட்டையை நான் அணிவதில்லை. விலையுயர்ந்த சட்டையைக் காண்பியுங்கள் என்று கூறினான். உடனே கடைக்காரர் இதுவும் நல்ல சட்டைதான், நல்ல துணிதான். கடந்த வாரம் நீங்கள் இதைப்போன்ற சட்டையை வாங்கிச் சென்றீர்களே என்று கேட்டார். அதற்கு அவன் அது என் FRIENDக்கு பரிசாகக் கொடுப்பதற்காக வாங்கினேன். நான் விலை குறைந்த சட்டையை ஒரு நாளும் அணியமாட்டேன் என்றான். நாம் கூட இந்த வாலிபனைப் போன்றுதான் இன்றைக்கு வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் ஒரு காரியத்தை மற்றவர்களுக்குச் செய்வதற்கு முன்பாக, அந்தக் காரியத்தை மற்றவர்கள் நமக்குச் செய்தால் ஏற்றுக்கொள்வோமா என்று சிந்தித்துப் பாருங்கள். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதையே நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்பதே இயேசு நமக்கு கற்றுக்கொடுத்த பாடமாகும். அதாவது ***''உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.''***

ஆகவே, கிறிஸ்துவைப்போல பாரபட்சமற்ற அன்பை மற்றவர்கள் மீது நீங்கள் செலுத்த விரும்பினால், நீங்கள் அதற்காக தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும். நீங்கள் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாக அன்பு செலுத்தும்போது, உங்களுக்கு எந்த பிரச்சனையும் ஏற்படாது. கலகம் நிறைந்த இந்த உலகத்தில் நீங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாகக் காணப்படலாம். வேதம் மத்தேயு 5:9ல் ***''சமாதானம்பண்ணுகிறவர் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்''*** என்று சொல்லுகிறது.

அப்.பவுல் ஒரு பட்டி மன்றம் ஏற்பாடு செய்கிறார். அந்த பட்டிமன்றத்திற்கு அவர்தான் நடுவர். பட்டி மன்றத்தின் தலைப்பு: ***''விசுவாசம், நம்பிக்கை, அன்பு எது பெரியது.''*** சரி இந்த பட்டிமன்றத்திற்கு அப். பவுல் என்ன தீர்ப்பு கொடுக்கிறார் தெரியுமா? ***''அன்பே பெரியது''*** என்று தீர்ப்பளிக்கிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம் அன்பில்லாத விசுவாசம் குளிர்ந்து போனதற்கு சமம். அன்பில்லாத நம்பிக்கையினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆனால், அன்போ அனல் மூட்டி, பாசமேற்றி விசுவாசத்தைத் தட்டி எழுப்புகிறது. நம்பிக்கையை தூண்டிவிடுகிறது. அன்பு நித்திய நித்தியமாய்க் கடந்து செல்கிறது.

ஒரு காட்டில் இரண்டு மான்கள் தாகத்தோடு தண்ணீருக்காக பல இடங்களுக்கு அலைந்து திரிந்தன. கடைசியில் ஒரு இடத்தில் மிகக் கொஞ்சம் தண்ணீர் மாத்திரம் இருந்தது. ஆண்மான் குடிக்கட்டும் என்று பெண் மான் காத்திருந்தது. பெண் மான் குடிக்கட்டும் என்று ஆண்மான் காத்திருந்தது. கடைசியாக ஒன்றில்லாமல் மற்றது குடிக்காது என்பதை அறிந்து அவை இரண்டுமே தண்ணீரில் வாய் வைத்தது. ஆனால் தண்ணீரோ குறையவில்லை. காரணம் இரண்டுமே ஒன்றுக்கொன்று பாசாங்கு செய்து மற்றது குடிக்கட்டும் என்று காத்திருந்ததுதான். பாருங்கள் அந்த இரண்டு மான்களுக்குள்ளும் எவ்வளவு பெரிய அன்பு. அன்புதான் தியாகஞ் செய்யும்.

வேதம் சொல்லுகிறது யோவான் 13:1ல் நம்முடைய இயேசு ஆண்டவர், ***''தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்த படியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்.''***

அவர் சிலுவையைக் கண்டு பயந்து ஓடி ஒளியாமல் நமக்காக பாடு, வேதனை, மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

தன்னை நிந்தித்தவர்கள், அவமானப் படுத்தியவர்கள், அடித்தவர்கள், கை கால்களிலே ஆணிகள் கடாவப்பட்டு சிலுவையிலே அறைந்தவர் எவரையும் அவர் வெறுக்கவில்லை. பிதாவாகிய தேவனிடத்தில் அவர்களுக்காக பரிந்து பேசி மன்னிப்பை பெற்றுக் கொடுத்தார்.

தேவபிள்ளைகளே! அந்த அன்பின் ஐக்கியம் உங்களில் உருவாகட்டும். அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்.

கடைசியாக, ***''ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை''*** *(யோவான் 15:13).*

*ஆமென்! அல்லேலூயா!*

தன் குழந்தை பசியோடு இருப்பதை அனுமதிக்காதவன், மற்ற குழந்தைகள் பசியோடு இருக்கும்போது, அவன் கண்டு கொள்வதில்லை. தன் சொந்த நாட்டு ஜனங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவன், எதிரி நாட்டு வீரனின் பாதுகாப்பைக் குறித்து கொஞ்சம் கூட கவலைப்படுவதில்லை. தன் குடும்பத்தின் மீது அன்பு செலுத்தி அவர்களை பாதுகாக்கிறவன், பணத்திற்காக சக மனிதனை கொலை செய்கிறான். தன் குடும்பத்தின் தேவைக்காக பொருள் சேர்ப்பதற்காக, மற்றவர்களிடத்தில் கொள்ளை அடிக்கிறான். தன் மனைவி, பிள்ளைகள் கற்போடு வாழ வேண்டும் என்று நினைக்கிறவன், மற்றவர்களை கற்பழிக்கிறான். தன்னுடைய குடும்பத்திற்கு யாரும் துரோகம் செய்யக் கூடாது என்று விரும்புகிறவன், தன் சுய ஆதாயத்திற்காக மற்றவர்களுக்கு துரோகம் செய்கிறான். இந்த உலகத்தில் உள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே காரணம், மாய்மாலமான அன்பு, பாரபட்சமான அன்பு.

## சரி, இந்த பிரச்சனைகளுக்கு என்ன தீர்வு?

எந்தவொரு மனிதன் பாரபட்சமற்ற அன்பை காண்பிக்கின்றானோ அவன் பிரச்சனைகள் அனைத்தும் அவனைவிட்டு நீங்குகின்றன. பாரபட்சமற்ற அன்புள்ள மனிதன் தன்னுடைய சுயநலத்தை மட்டுமே நினைத்துக் கொண்டிராமல், பிறருடைய நலத்தையும் விரும்புகிறான். பசியாயிருப்பவனுக்கு தன்னுடைய உணவை பங்கிட்டுக் கொடுக்கிறான். தன்னுடைய எதிரியிடம் அன்பைக் காட்டுகிறான். சக மனிதனுக்கு தீங்கு செய்ய மாட்டான். பிறருடைய பொருட்களுக்கு ஆசைப்படமாட்டான். யாருக்கும் துரோகம் செய்ய விரும்பமாட்டான். குறிப்பாக பொய் பேச மாட்டான்.

இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் பிறரிடத்தில் பாரபட்சமற்ற அன்பைக் காட்டும்போது, உலகிலுள்ள எல்லா பிரச்சனைகளும் நீங்கும். பாரபட்ச அன்பே எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வாக இருக்கிறது.

## சரி இந்த அன்பிற்கு இலக்கணமாக யாரை நாம் முன் நிறுத்தலாம்?

அன்பின் குணங்களோடு, பாரபட்சமற்ற அன்பிற்கு இலக்கணமாக வாழுகின்ற மனிதர்கள் இந்த பூமியில் இருக்கிறார்களா என்று நீங்கள் கேட்கலாம். இதற்கான பதில் ஒருவர் இருந்தார், அவர் இன்றைக்கும் இருக்கிறார், அவர் எப்போதும் இருப்பார். ஆமென்! அவர் யார்? மனிதர்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக, பரலோகத்தைத் துறந்து இந்த பூலோகத்திற்கு வந்து, இப்படித்தான் வாழவேண்டுமென்று இலக்கணம் வகுத்த இயேசு கிறிஸ்துவே பாரபட்சமற்ற அன்பிற்கு முன்மாதிரியாக இருந்தார். அவர் இருக்கிறார், என்றும் இருப்பார்.

## இயேசு கிறிஸ்துவின் பாரபட்சமற்ற அன்பு:

இந்த உலகத்தில் அன்பிற்கு உதாரணமாக காணப்படும் தாய், தன்னுடைய குழந்தைக்காக உயிரைக் கொடுக்க முன்வரலாம். ஆனால், தன் பக்கத்து வீட்டில் உள்ள குழந்தைக்காக தன் உயிரைக் கொடுப்பதற்கு முன்வருவாளா? நிச்சயமாக இல்லை. ஆனால், இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை தம்முடைய வார்த்தையினால் சிருஷ்டித்தவர், சகல மனிதர்களின் பாவத்திற்காக, சாபத்திற்காக, அவர்களுக்கு மீட்பை கொடுக்கும்படி, சிலுவையிலே தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் கிறிஸ்தவர்களுக்காக மட்டும் மரித்தவர் அல்ல. அனைத்து உலகத்திலுள்ள சகல மனிதர்களுக்காகவும், எல்லா மதத்தைச் சார்ந்தவர்களுக்காகவும், தன் உயிரை கொடுத்தார். பாவத்திற்காக மரித்த இயேசு கிறிஸ்து, பாவத்தை வென்று, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவரிடத்தில் பாரபட்சமில்லை. அவர் எல்லோரையும் சமமாக பார்க்கிறார். அவர் எல்லாரிடத்திலும் அன்பு கூறினார்.

## அவர் மனிதர்கள் எப்படிப்பட்ட அன்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்?

***"உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத்தேயு 22:39)***

சாதாரணமாக ஒரு மனிதன் தன்னை உயர்த்தி மற்றவர்களை தாழ்ந்த இடத்தில் வைத்து பார்ப்பதே அவனுடைய இயல்பு. ஒரு வாலிபன் ஜவுளிக் கடைக்குச் சென்று அங்கிருந்த கடைக்காரரைப் பார்த்து எனக்கு 300 ரூபாய்க்குள் ஒரு சட்டை கொடுங்கள் என்று கேட்டான். கடைக்காரரும் சட்டையை எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு சந்தோஷமாக கடையை விட்டு வெளியே வந்தான். மீண்டும்


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

# உலகத்திற்காக உத்தரவாதமெடுத்து ஜெபிப்போம்!



*''ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள்.........'' (எபி 13:17)*

1. தேசங்களிடையே நிலவும் பகை விரோதங்கள் மாற, இதனிமித்தம் அவ்வப்போது நடக்கும் யுத்தங்கள் நீங்கி அமைதி நிலவ ஜெபிப்போம்.
2. தேசங்களை தீட்டுப்படுத்தும் வேசித்தன விபச்சாரக் கிரியைகள் முற்றும் அழிக்கப்பட, இப்பாவத்தில் ஈடுபடுவோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, மறுவாழ்வு பெற ஜெபிப்போம்.
3. உலகமெங்கும் மதத்தின் பெயரால் ஆன்மீகம் என்ற வடிவில் ஜனங்களை அடிமைப்படுத்துவோர் தேவனால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
4. தேசங்களில் கொலை, கொள்ளை, தற்கொலை, கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம், வன்கொடுமை, வன்முறை போன்ற சமூக விரோதச் செயல்களைச் செய்யும்படி தூண்டுகிற துன்மார்க்க ஆவிகள் கட்டப்பட, சமூக விரோதிகள் தேவ அன்பால் தொடப்பட ஜெபிப்போம்.
5. அந்தந்த தேசத்தின் எல்லைகளில் தேவனுடைய பாதுகாப்புண்டாக, பாதுகாப்புக்கெதிரான அண்டை நாடுகளின் ஊடுருவல் இல்லாதிருக்க எல்லை பாதுகாப்பு படைவீரர்களுக்காக ஜெபிப்போம்.
6. அனைத்து தேசங்களின் இராணுவத் தளவாடங்கள், இராணுவ தலைமையிடம், இராணுவ வீரர்கள், இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
7. தேசமெங்குமுள்ள எல்லா ஜனங்களும் மனிதாபிமானத்தோடும், மனித நேயத்தோடும் வாழ, தேவ அன்பினால் ஒருவரையொருவர் நேசித்து சகோதர சிநேகமுள்ளவர்களாயிருக்க ஜெபிப்போம்.
8. தேசத்தின் இயற்கை சூழல், சுற்றுப்புற சுகாதாரம், நீர் நிலைகள், அடிப்படை வாழ்வாதாரங்கள், சக்தி வலைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

9. தேசமெங்கிலுமுள்ள பல்வேறு துறைகள் மற்றும் துறை அதிகாரிகளுக்காக, அனைத்துத் துறைகள் மூலமாயும் ஜனங்களுக்கு நன்மையுண்டாக, அனைத்துத் துறைகளும் சிறப்பாய்ச் செயல்பட ஜெபிப்போம்.

10. வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நாடுகளுக்கு உதவிசெய்து அந்நாட்டின் முன்னேற்றத்திற்க்காக வழிவகுக்க ஜெபிப்போம்.

11. உலகமெங்குள்ள அனைத்து குடும்பங்கள் மீதும் தேவ ஆளுகை உண்டாக, குடும்பத்தில் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள் உறவு சிறந்த முறையில் காக்கப்பட ஜெபிப்போம்.

12. வறுமைக் கோட்டிற்குள் கீழ் வாழும் குடும்பங்கள் தெருவோரங்களில், சாலையோரங்களில், பொது இடங்களில் பாதுகாப்பின்றி குடியிருப்போருக்காக, அந்தந்த தேசத்தின் அரசாங்கங்கள் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் நடவடிக்கையெடுக்க ஜெபிப்போம்.

13. விவாகரத்துக்கள், குடும்ப சண்டைகள், வரதட்சனைக் கொடுமைகள், பெண்கள், பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் நீங்க ஜெபிப்போம்.

14. தேசத்திலுள்ள அனைத்து வாகனங்கள், சாலைகள், வாகன ஓட்டுனர்கள் மீது தேவ ஆளுகை உண்டாக, போக்குவரத்து விதிமுறைகளை சரியாய் கடைபிடிக்க, சாலைகள் செப்பனிடப்பட, விபத்தை உண்டாக்குகிற அந்தகார வல்லமைகள் கட்டப்பட ஜெபிப்போம்.

15. தேசமெங்குமுள்ள வியாதியஸ்தர்கள், கைவிடப்பட்டோர், கைம்பெண்கள், விதவைகள், அநாதைகள், மாற்றுத் திறனாளிகள், தர்மம் எடுப்போர், திருநங்கைகள், மனவளர்ச்சி குன்றியோர் நலன் காக்கப்பட ஜெபிப்போம்.

16. தேசமெங்குமுள்ள சிறிய தொழில் முதல் பெரிய தொழில் முதலாளிகள், சிறு வியாபாரம் முதல் பெரிய வியாபாரம் செய்வோர், நீதி நியாயத்தைக் கடைப்பிடிக்கிறவர்களாயிருக்க ஜெபிப்போம்.

17. தேசமெங்குமுள்ள மருத்துவமனைகள், மருந்தகங்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருத்துவக் கல்லூரிகள் மீது தேவ ஆளுகை உண்டாக ஜெபிப்போம்.

18. தேசங்களில் சட்டம் ஒழுங்கு, நீதி நியாயம், தனி மனிதனின் உரிமை, கடமைகள் முதற்கொண்டு அரசின் கடமைகள் வரை சரியாய் நிலை நாட்டப்பட ஜெபிப்போம்.

19. தேசம் கடந்து வாழ்வோருக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கப்பெற, குடியுரிமை காக்கப்பட, தேச துரோகத்தில் ஈடுபடாதிருக்க ஜெபிப்போம்.

20. உலகமெங்கும் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் அதை விசுவாசித்து, தேவ இராஜ்ஜியத்திற்கு பலன் கொடுக்கிறவர்களாயிருக்க ஜெபிப்போம்.

21. உலகமெங்குமுள்ள சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம் முழுமையாய் சென்றடைவதற்கு ஏதுவான கிரியைகளை நடப்பிக்க ஜெபிப்போம்.

22. தேசமெங்கும் சிறைக் கைதிகளாக, அடிமைகளாக, அகதிகளாக இருப்போர் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

23. தேசமெங்கும் உழைக்க மனமின்றி சோம்பேறிகளாயிருந்து அதினிமித்தம் வறுமையிலிருப்போருக்காக ஜெபிப்போம்.

24. ஏழை எளியோர், பாமரர்கள், பின் தங்கிய கல்வியறிவுள்ளோர், குழந்தைகள், பெண்கள் என பலத்தரப்பட்டோரை ஏமாற்றி பிழைக்கும் ஏமாற்றுக்காரர்களை தேவன் சந்திக்கும்படியாக ஜெபிப்போம்.

25. தேசமெங்கும் ஜெப தரிசனம் பெற்ற ஜெபத்தலைவர்கள் திரளாய் எழும்ப, இவர்கள் மூலம், ஜெபத்தைக் குறித்த சத்தியங்கள், வெளிப்பாடுகள், தரிசனங்கள் ஜெபவீரர்களுக்குச் சென்றடைய ஜெபிப்போம்.


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

# வேதத்தை வாசி! ஊக்கமாய் ஜெபி!

## சகோ. J. சாம் ஜெபத்துரை

வேதத்தை வாசித்து, அதன் பின்பு ஊக்கமாய் ஜெபிப்பது நமது ஆவிக்குரிய வளர்ச்சியை அதிகமாக துரிதப்படுத்தும். அப்படியே வேதத்தை வாசித்து விட்டு, அதிலுள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு ஊக்கமாய் ஜெபித்த பரிசுத்தவான்கள், அற்புதமான வரங்களையும், வல்லமைகளையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். வேத வாக்கியங்கள் நம்முடைய இருதயத்தில் நேச அக்கினியை பற்ற வைக்கிறது. அந்த வாக்கியங்கள், தேவனிடத்திலிருந்து நமக்கு மகிமையான காரியங்களைப் பெற்றுத் தருகின்றன. நம்மை ஜெபத்தில் வழி நடத்திச் செல்லக்கூடிய ஒரே தீபம் கர்த்தருடைய வசனம்தான்.

தமிழ்நாட்டில் மிகவும் வல்லமையாய் ஊழியம் செய்த ஒரு ஊழியர் ஒரு முறை என்ன சொன்னாரென்றால், ‘‘நான் வேதத்தை வாசிக்கும்போது, ஏதோவொரு சரித்திரப் புத்தகத்தை வாசிப்பது போல் வாசிக்காமல் ஒவ்வொரு வசனமும், எனக்காக எழுதப்பட்டது என்ற உணர்வோடுகூட, ஜெபத்தோடு வாசிப்பேன். ஆங்காங்கே பரிசுத்தவான்களுக்குத் தேவன் பாராட்டின கிருபைகளையும், இரக்கங்களையும் வாசிக்கும்போது, எனக்கும் அவ்விதமான கிருபைகளையும், இரக்கங்களையும் பாராட்டவேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஊக்கமாய் ஜெபிப்பேன். அற்புதங்களையெல்லாம் வாசிக்கும்போது அதே அற்புதங்கள் என்னுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் நடைபெற வேண்டும் என்று ஊக்கமாக ஜெபிப்பேன்’’ என்றார். அப்படி ஜெபித்த அந்த ஜெபம்தான் இன்று அவரை தலைசிறந்த தேவஊழியராக மாற்றியிருக்கிறது.

ரோமர் 10:17ல், ‘‘விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்’’ என்று வாசிக்கிறோம். தேவனுடைய வசனத்தை நாம் வாசிக்க வாசிக்கத்தான் நம்முடைய இருதயத்திலே விசுவாசம் வரும். விசுவாசத்தோடு ஜெபித்தால்தான் அற்புதங்கள் நடக்கும். யார் தேவனுடைய வசனத்தை வாசிக்கவில்லையோ, யார் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படவில்லையோ, அவருடைய உள்ளத்திலே விசுவாசம் சுரப்பதில்லை.

விசுவாச வீரனான ஜார்ஜ் முல்லர் சொன்னார், ‘‘நான் வேதம் முழுவதையும் ஒவ்வொரு ஆண்டும் நான்கு முறை படித்து முடித்துவிடுவேன். பிறகு படித்த சத்தியங்களை என்னுடைய வாழ்க்கையின் அனுபவமாக்குவதும் என்னுடைய வழக்கம். ஒவ்வொரு முறையும் நான் வேதத்தை வாசிக்கும்போது, அது எனக்கு புதுப்புது இன்பத்தை அளிக்கிறது. வேத புத்தகத்தை வாசித்துவிட்டு, பிறகு அதை தியானிக்காத நாளை நான் நஷ்டமான நாளாக கருதுகிறேன்’’ என்று கூறியிருக்கிறார்.

நரகத்தை எங்கே காணலாம்? என்று ஒருவர் கேட்டாராம். அதற்கு ஒரு பக்தன், எந்த வீட்டில் வேதத்தை வாசித்துவிட்டு, பிறகு குடும்ப ஜெபம் இல்லாத வீட்டில் காணலாம் என்று பதிலளித்தாராம். வேதத்தை ஒரு முறை கூட வாசிக்காத அநேக கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்களால் வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை அறிந்துக்கொள்ள முடிவதில்லை. அதனால், ஜெபத்தில் அதை உரிமை பாராட்டி பெற்றுக்கொள்ள முடிவதில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதமும் அங்கேயில்லை.

வேதத்தை வாசித்துப் பாருங்கள். இனி நீங்கள் பெலீனன் அல்ல, கர்த்தரே உங்கள் பெலன் (சங்கீ. 27:1). இனி நீங்கள் நோயாளி அல்ல, உங்கள் நோய்கள் கல்வாரி சிலுவையில் நீங்கிவிட்டது (சங்கீ. 103:3). இனி நீங்கள் தரித்திரனல்ல, ஏனெனில் கிறிஸ்துவே உங்கள் ஐசுவரியமாக இருக்கிறார் (2 கொரி. 8:9). இனி நீங்கள் பாவிகள் அல்ல, கர்த்தரே உங்களை நீதிகரிக்கிறார். ஆகவே, நீங்கள் ஜெபத்தோடு கூட வேத்தை வாசித்துவிட்டு, ஸ்தோத்திரத்தோடு கூட அதை உரிமையாக்கிக்கொள்ளுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

இயேசுவின் கேள்விகள் 76

# கேள்வியும் பதிலும் நானே

மத்தேயு 23:17,19

**குருட்டு மடையரே! எது சிறந்தது? பொன்னா? பொன்னைத் தூயதாக்கும் திருக்கோவிலா? குருடரே! எது சிறந்தது? காணிக்கையா? காணிக்கையைத் தூயதாக்கும் பலிபீடமா?**

வெளிவேடக்கார மறை நூல் அறிஞரையும், பரிசேயரையும் இயேசு வெளுத்து வாங்கிய பகுதி இது! மிகக் கடுமையான வார்த்தைகளால் அவர்களது போலித்தனத்தை வெளிப்படுத்துகிறார். இயேசு அவர்களைச் சாடுவது அவர்கள் மீதான தனிப்பட்ட கோபத்தினால் அல்ல, அவர்களால் ஏழை எளிய அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுகிறார்களே என்பதற்காக. தவறான போதனைகளால் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்களே என்பதற்காக.

தேவாலயத்தின் மீது ஆணையிடலாம் பரவாயில்லை. அப்படி ஆணையிட்டால் அதை மீறினாலும் தவறில்லை. ஆனால் 'திருக்கோவிலில் உள்ள பொன்' மீது ஆணையிட்டால் அது தவறு. அதை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும் என அவர்கள் ஒரு கிளை சட்டத்தை இட்டிருந்தார்கள். அதே போல, பலிபீடத்தின் மீது ஆணையிட்டால் பரவாயில்லை. அதை நீங்கள் மீறினாலும் பிழையில்லை, ஆனால் பலிபீடத்தில் வைக்கப்பட்டுள்ள காணிக்கையின் மீது ஆணையிட்டால் அதை நிச்சயம் நிறைவேற்றவேண்டும் என்றும் ஒரு சட்டத்தை வைத்திருந்தார்கள். அவர்களுடைய இந்த போலித்தனத்தை இயேசு கண்டித்தார்.

தேவாலயத்தின் மீது ஆணையிடுகிறவன் கோயிலின் மீதும், அதன் பொன் மீதும், அதில் வீற்றிருக்கின்ற ஆண்டவர் மீதும் ஆணையிடுகிறான். எது பெரிது? கோயிலில் இருக்கும் பொன்னா,




www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

பொன்னையே பரிசுத்தமாக்கும் ஆலயமா? எது சிறந்தது ஆலயத்தில் இருக்கும் பொன்னா, ஆலயத்தில் வீற்றிருக்கும் தேவனா? பலிபீடத்தின் மீது ஆணையிடலாம் என்கிறீர்களே, பலிப்பொருளை விட அந்தப் பலிப்பொருளையே பரிசுத்தப்படுத்தும் பலிபீடம் சிறந்ததல்லவா? என கிடுக்கிப்பிடி கேள்விகளை வீசுகிறார்.

உன் தேவனாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார் (யாத்திராகமம் 20:7) எனும் தேவ உண்மையில் ஆணையிடுவதையே குறிப்பிடுகிறது. தேவன் பெயரால் ஆணையிடுபவன் அதை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும் என்பதே அது சொல்லும் செய்தி. நாம் பல வேளைகளில் ஆண்டவரின் பெயரை அடிக்கடி உச்சரிப்பதையோ, விவாதங்களில் பயன்படுத்துவதையோ அந்த வசனத்தோடு இணைத்துப் பார்ப்பதுண்டு.

யூதர்களைப் பொறுத்தவரையில் ஆணையிடுதல் என்பது மிகவும் சீரியசான ஒரு விஷயம். ஆணையில் தேவன் பெயரை இழுத்தால், அது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான ஒன்றாக மாறிவிடுகிறது. அப்படிப்பட்ட ஆணைகளை எப்படியாவது நிறைவேற்றியே ஆகவேண்டும் என அவர்கள் சட்டம் இயற்றியிருந்தார்கள். அப்படிப்பட்ட ஆணைகளை மீறுவது மனிதருக்கு எதிரானது மட்டுமல்லாமல், தேவனுக்கு எதிரானதாகவும் மாறிவிடுகிறது. அது ஒரு பாவமாய் நிலைபெற்று விடுகிறது.

அதனால் தேவனைத் தவிர்த்த விஷயங்களில் ஆணையிடுவதை அவர்கள் ஒரு மாற்று வழியாகப் பயன்படுத்தினார்கள். விண்ணகத்தின் மீது ஆணை, மண்ணகத்தின் மீது ஆணை, என் தலையின் மீது ஆணை, எருசலேமின் மீது ஆணை என்றெல்லாம் ஆணையிட்டால் அது தேவன் மீதான ஆணையல்ல என்று அவர்கள் போதித்தார்கள்.

ஒரு ரபி தன்னுடைய போதனையில், சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் தேவன் பெயரால் ஆணையிடக் கூடாது என்றும், அது பாவம் என்றும் போதித்தார். அதாவது, 'தேவன் பேரில் சத்தியமா சொல்றேன் நான் உனக்கு போன் பண்ணினேன்', 'காட் பிராமிஸ் நான் பாத்தேன்' என்றெல்லாம் சின்னச் சின்ன விஷயத்துக்கு தேவனை இழுக்கக்கூடாது. அதற்கு மற்ற பொருட்களின் மீது ஆணையிடலாம் என போதித்தார்.

தேவனைத் தவிர்த்த மற்ற விஷயங்களில் ஆணையிட்டால் அது பிரச்சினையில்லை, நிறைவேற்றாவிட்டாலும் அது தேவனுக்கு எதிரானதாய் இருக்காது என்பதே அவர்களின் நம்பிக்கை. அந்த போலித்தனத்தை இயேசு கண்டித்தார். விண்ணகம் தேவனின் அரியணை, மண்ணகம் அவரது கால்மனை, உண்டான அனைத்துமே அவரால் உண்டாயின. அப்படி இருக்கும்போது தேவன் இல்லாத ஒன்றை எப்படி கண்டுபிடிப்பீர்கள். எதில் ஆணையிட்டாலும் அது இறைவனைத் தொடர்புபடுத்தும் ஆணையே. அதை நிறைவேற்ற வேண்டும், என்பதே அவரது சிந்தனையாய் இருந்தது.

அதனால் தான், ஆணையே இடாதீர்கள். உங்கள் பதில் ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை என்று இருக்கட்டும் என்றார் அவர். ஆணையே தேவையில்லாத அளவுக்கு நேர்மையாய் வாழவேண்டும் என்பதே அவரது ஆவலாய் இருந்தது. 'அவன் கிறிஸ்தவன்பா.. அவன் பொய் சொல்ல மாட்டான், அவன் சொன்னா சொன்னது தான்' என ஒருவன் வாழ்ந்தால் அதுவே தேவனின் பெயரை பெருமைப்படுத்தும் செயல்.

உண்மையில் யூதர்களின் காலத்தில் இரண்டு குழுவினர் இருந்தார்கள், எசென்ஸ் மற்றும் குவாக்கர்ஸ் என்பது அவர்களின் பெயர். அவர்களுடைய சொல்லுக்கு முழுமையான நம்பிக்கையும் மரியாதையும் அன்றைய காலத்தில் இருந்தது. ''நான் உண்மையா சொல்றேன்'' என அந்த குழுவிலுள்ள ஒருவர் சொன்னால், அதற்கு மறுபேச்சு கிடையாது. சொல்லப்போனால் அரசு அதிகாரிகள் கூட அதை அப்படியே எடுத்துக் கொள்வார்கள். அந்த இரண்டு குழுவினரும் ஆணையிடுவதே இல்லை. காரணம் அவர்களுடைய வாக்குக்கு அவ்வளவு மரியாதை இருந்தது.

என் உயிரின் மேல் ஆணையாகச் சொல்கிறேன்; உங்களை வருத்தத்துக்கு உள்ளாக்காமல் இருக்கவே இதுவரை நான் கொரிந்துக்கு வரவில்லை. கடவுளே இதற்குச் சாட்சி (2 கொரிந்தியர் 1:23)

என எழுதுகிறார் பவுல். தனது உயிரின் மீது ஆணையிடுகிறார், அந்த ஆணைக்கு தேவனையும் சாட்சியாக்குகிறார். அதே போல கலாத்தியர் 1:20ல், ''நான் உங்களுக்கு எழுதுவதில் பொய் ஒன்றுமில்லை; இதற்குக் தேவனே சாட்சி'' என தேவனை இழுத்து ஆணையிடுகிறார்.

ஆணையிடாத அளவுக்கு நமது வாழ்க்கை நேர்மையாய் உண்மையாய் இருக்க வேண்டும். அப்படி எல்லா நேரமும் உண்மையை சொல்லாத மனிதன் தான் ஆணையிடுகிறான். 'நான் பொய் சொல்வேன், ஆனா இந்த விஷயத்துல நான் உண்மையைத் தான் சொல்றேன்...' என்பதே ஆணையின் மறைமுகப் பொருள். அப்படியானால் பவுல் தீய மனிதரா? அவரது வார்த்தையில் உண்மை இல்லையா? எனும் கேள்வி வரலாம்.

இதற்கு இன்னொரு கோணமும் உண்டு. ஒருவேளை மனிதர் நேர்மையாளராய் இருந்து, உலகம் நேர்மையற்றதாய் இருந்தாலும் அங்கே ஆணை தேவைப்படுகிறது. இல்லையேல் தீய உலகம் சிலவற்றை நம்புவதில்லை. பவுல் ஆணையிடுவது பவுல் மோசமானவர் என்பதை வெளிப்படுத்தவில்லை, உலகம் மோசமாய் இருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது.

இன்றைய தொழில்நுட்பத்தில், 'ஹேய் சிரி' என்றால் ஆப்பிள் கருவிகள் கவனிக்கின்றன. ஹேய் அலக்ஸா என்றால் அமேசான் கருவி கவனிக்கிறது. ஹே கூகிள் என்றால் கூகிள் கருவி கவனிக்கிறது. அது வரை பதிலளிக்காமல் அமைதியாய் இருக்கிறது. தேவன் அப்படியல்ல. 'ஹே தேவனே' என்று சொன்னால் மட்டும் தேவன் கவனிப்பதில்லை. அவர் எல்லா வார்த்தைகளையும் கவனிக்கிறார். எல்லா வார்த்தைகளையும் கேட்கிறார். அதனால் தான் நாம் எப்போது பேசினாலும், என்ன பேசினாலும், என்ன வாக்குறுதி கொடுத்தாலும் அதில் உண்மையாய் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆலயத்திலோ, ஆலய வளாகத்திலோ இருக்கும்போது நான் பணிவுடனும், தாழ்மையுடனும் பேசுவேன். நண்பர்கள் வட்டாரத்தில் இருக்கும் போது எனது பேச்சில் உலகத்தின் வாடையே அதிகமாய் இருக்கும். அலுவலகத்தில் இருக்கும் போது என்னுடைய வார்த்தையில் கண்டிப்பு மட்டுமே இருக்கும். வீட்டில் இருக்கும்போது எனது வார்த்தைகளின் மன்னிப்பு இருக்காது என்றெல்லாம் பல்வேறு முகமூடிகளுடன் வாழ்வது உண்மையான கிறிஸ்தவ வாழ்வு அல்ல. எப்போதுமே ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், அது தேவனுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

ஆண்டவருக்குப் பொருத்தனை ஒன்றை ஒருவன் செய்துகொண்டால் அல்லது ஆணையிட்டுக் கூறிய உறுதிமொழிக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டால் அவன் தன் வார்த்தையை மீறக்கூடாது. தான் உரைத்தபடியெல்லாம் அவன் செய்ய வேண்டும் எனும் தேவவார்த்தையும் (எண் 30:2), உன் தேவனாகிய ஆண்டவருக்கு பொருத்தனை செய்திருந்தால், அதைச் செலுத்துவதற்குக் காலந்தாழ்த்தாதே. ஏனெனில், அது உனக்குப் பாவமாகும். உன் தேவனாகிய ஆண்டவரும் அதை உன்னிடம் கேட்பார் என்பது உறுதி எனும் தேவவார்த்தையும் (உபாகமம் 23:21) - தேவனுக்கான பொருத்தனையை, தேவன்மேல் செய்கின்ற ஆணையை நிறைவேற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன. இயேசுவோ, கிறிஸ்தவன் எப்போதுமே உண்மையுள்ளவனாய் இருக்க வேண்டும் என அதிகபட்ச உண்மையை எதிர்பார்க்கிறார்.

பொன்னின் மீதும், காணிக்கைப் பொருட்களின் மீதும் ஆணையிடுவது நிச்சயம் நிறைவேற்ற வேண்டியது என்பது அவர்களுடைய உலகப் பொருட்களின் மீதான ஆசையைக் காட்டுகிறது. பலிபீடத்தையோ, ஆலயத்தையோ இரண்டாம் இடத்துக்குத் தள்ளுவது அவர்களுக்கு தேவன் மீது ஆழமான அன்பு இல்லை என்பதைக் காட்டுகிறது. இயேசு பலியாய் வந்தவர், அவரே பலிபீடமாகவும் வந்தவர். தேவனுக்கும் மனிதருக்கும் இடையேயான பாலமாய் வந்தவர். போலித்தனமான போதனைகளை விட்டு விடச் சொல்லி எச்சரிக்கிறார்.

இயேசுவின் இந்தக் கேள்வி நமக்குள் இரண்டு கேள்விகளை எழுப்பட்டும். நமது வாழ்க்கை எப்போதும் ஆணையிடத் தேவையில்லாத அளவுக்கு நேர்மையாய், உண்மையாய், வெளிப்படையாய் இருக்கிறதா? நமது போதனைகள் தன்னலமற்று தேவனின் இயல்பை வெளிப்படுத்துவதாக இருக்கிறதா?

- அன்புடன்

**போதகர். J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

ஆதிக்குடிகள் ஆண்டவருக்கே
Pray for Primitive Tribes

# ஜங்கம பண்டாரம்



பகல்வேடக் கலையைக்கொண்டு ஊர்ஊராகச் சுற்றிவாழும் தெலுங்கு நாடோடியினரே ஜங்கம பண்டாரம். இவர்கள் தெலுங்கு விஜயநகர நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு வந்த இவர்களின் வரலாறு நாயக்க மன்னர்களின் தமிழக வருகைக்குப் பின்னரே தமிழ்நாட்டில் துவங்குகிறது.

பகல்வேட நாடோடி என்னும் கலை ஆந்திராவில் தோற்றம் பெற்று, பின்பு தமிழகத்திற்கு வந்திருக்கிறது. இக்கலைவடிவம் 13ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தோன்றியதற்கான சான்றுகள் தெலுங்கு இலக்கியங்களில் குறிப்பாகக் கிடைக்கின்றன. தமிழகத்தில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பகல்வேடம் தோற்றம் பெற்றுள்ளது. இக்கலைஞர்களை நாயக்க மன்னர்கள் ஒற்று வேலைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளதாகவும் அதற்காக அவர்களுக்கு வல்லம் பகுதியில் மானியங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. நாயக்கர்களின் ஆட்சி மறைந்த பின்னர் அரசியல் காரணங்களினால் வல்லம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து திண்டிவனம் பகுதியில் பரவியுள்ளனர் தற்போது ஆந்திராவிலிருந்து சில குழுக்கள் ஆண்டுதோறும் தமிழகத்தின் பல பகுதிகளில் சுற்றித் திரிந்து இந்தக் கலையை நிகழ்த்திச் செல்கின்றனர்.

பகல்வேடமிடும் கலைஞர்களின் சாதி அதிகாரபூர்வமாக அதாவது வேலை, படிப்பு முதலியவற்றில் ‘ஜங்கம்’ எனப் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் சமுதாய மதிப்பிற்காக தாங்கள் வாழ்கின்ற இடங்களுக்கேற்பத் தங்கள் சாதியினரைக் குல்லுக் கவர நாயுடு, பலிங்க நாயுடு, லிங்காயத்து நாயுடு எனக் கூறிக்கொள்கின்றனர். தென்னற்காடு மாவட்டத்தில் தென்களவாய் என்னும் ஊருக்கு அருகிலுள்ள மதுரவையிரம் பேட்டை, ஆண்டார்குப்பம், தர்க்காஸ், ஓமந்தூர் ஆகிய கிராமங்களில் சில குடும்பங்கள் பகல்வேடக் கலையில் ஈடுபட்டு உள்ளன. இவை போக ஆந்திர மாநிலத்திலிருந்து அவ்வப்போது பல குழுக்கள் தமிழகத்திற்கு வந்து முகாமிட்டு இக்கலையை நிகழ்த்துவது நடைமுறையிலுண்டு.

பகல்வேடம் நடத்துவோரின் தாய்மொழி தெலுங்கு மொழி. ஆனால் தமிழ்நாட்டில் வசிப்பதால் பகல்வேட நிகழ்ச்சியின்போது தமிழிலேயே பாட்டுப் பாடி கதை சொல்கின்றனர். தமிழ்நாட்டிற்கு வந்து போய்க்கொண்டு இருக்கின்ற ஆந்திர மாநில பகல்வேடக் கலைஞர்கள் தெலுங்குப் பாடல்களைப் பாடி கதை சொல்லும் போக்கும் உள்ளது.

ஆந்திரம், தெலங்கானா பகுதிகளில் இசை, நாடகம் ஆகியவற்றோடு இணைந்த நாடகமாகவும் மூன்று அல்லது நான்கு மணி நேரம் நடக்கக்கூடிய தன்மையோடு இருந்த பகடிவேஷ கலை தமிழகத்திற்கு வந்தபின் பல மாற்றங்களுக்கு இலக்காகி இன்று வீதிகளில் நிகழ்த்தப்படும் கலையாக உருப்பெற்றிருக்கிறது.

ஒரு நீண்ட கதையின் ஒரு கூறினை ஓரிடத்திலும், அடுத்த கூறினை அடுத்த இடத்திலும் சொல்லி கதை முழுவதையும் நிகழ்த்தி விடுகின்ற தன்மையை இப்போதுள்ள பகல்வேடத்தில் காண முடியவில்லை. தொடக்கத்தில் முழுக்கதையையும் நடித்துக் காட்டும் வடிவத்தில் இருந்த பகல்வேடம் இன்று ஒரு துண்டுப் பகுதியை மட்டுமே நடித்துக் காட்டிச் செல்லும் குறுகிய வடிவத்தைக் கொண்டதாக மாறியுள்ளது. பகல் வேடக் கலைஞர்களுக்குப் 'பல வேடக்காரர்' என்ற பெயரும் உண்டு. இவர்கள் நாயக்கர்கள் காலத்தில் வேறு வேறு வேடங்களைப் புனைந்து கதை சொல்பவர்களைப் போல, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் சென்று அவர்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துவருவர். இவ்வாறு அறிந்து கொள்ளும் பொருட்டு ஒற்றர் வேலை செய்வதற்காகவே அரசர்கள் தங்களை ஆந்திரப் பகுதியிலிருந்து இங்கு இடம்பெறச் செய்து குடி அமர்த்தினார்கள் என்றும் கூறுகின்றனர்.

ஒற்றறிவது மட்டுமல்லாமல் மன்னர்களின் பெருமையைப் புகழ்ந்து பாடி அவர்கள்மீது பொதுமக்களுக்கு மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தவும் இவர்கள் முனைந்திருக்கக்கூடும். இப்படி அரசர்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்ட பகல் வேடக் கலைஞர்களுக்கு நாயக்க மன்னர்கள் மானியங்கள் அளித்து ஆதரித்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

பகல் நேரங்களில் மக்கள் மத்தியில் மன்னரின் அருமை பெருமைகளைப் பறைசாற்றவும் மக்கள் கருத்தறியவும் வேடம் புனைந்து சென்றிருக்கின்றனர். சிவராத்திரி போன்ற புனித இரவுகளுக்கென அமைந்த கலையானது பல காரணங்களால் பகல் வேடமாக உருப்பெற்றிருக்கிறது. நாயக்க மன்னர்களின் ஆட்சிச் சரிவோடு புதிதாக வந்த மராட்டிய மன்னர்களின் ஆதரவின்மையால் தங்களின் மானியப் பகுதியான வல்லம் பகுதியிலிருந்து தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறுகின்றனர்.

ஒரு வேடத்தை இரண்டு நாள் போடுவர். அவ்வாறு இரண்டு அல்லது மூன்று வேடங்களை இரண்டு இரண்டு நாள்கள் என்ற முறையில் ஒரு வாரத்திற்குக் குறையாமல் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். நிகழ்ச்சி முடிந்த பின்பு ஒருவர் அனுமார் வேடம் பூண்டுகொண்டு வர, மற்றவர்களும் வசூலுக்கு உடன் செல்வர். நிகழ்ச்சியில் கிடைக்கும் வருமானத்தைக் கலைஞர்கள் சமமாகப் பங்கிட்டுக்கொள்கின்றனர். மொத்தத்தில் பகல்வேடக் கலைஞர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியே உள்ளனர். இவர்களின் வீடுகள் நாணல், விழல் ஆகியவற்றால் வேய்ந்த நிலையிலேயே உள்ளன. இவர்களுடைய விவசாய நிலங்களிலும் போதிய வருமானம் கிடையாது. பொருளாதாரச் சிக்கலினால் இவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படித்தவர்களை இக்கலைஞர்கள் மத்தியில் காணமுடியவில்லை. ஒரு சில வசதியுள்ள குடும்பங்களில் சிலர் மட்டும் படித்து அரசாங்க வேலையில் உள்ளனர்.

முழு நேரத் தொழிலாக பகல் வேடத்தைத் தங்களின் பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருந்த கலைஞர்கள் அந்நிலை மாறி இன்று சிறுசிறு விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் மாறியுள்ளனர். இப்போது தமிழகத்தில் 25க்கும் மேற்பட்ட குழுக்கள் இக்கலையோடு தொடர்புகொண்டு நடத்திவருகின்றனர். ஆந்திராவிலிருந்து சில குழுக்கள் ஆண்டுதோறும் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு வந்து இக்கலையை நிகழ்த்திச் செல்கின்றன. இக்கலைவடிவம் தங்களின் வாழ்க்கைத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என்றும், மக்களிடம் தொடர்ந்த ஆதரவு இல்லை என்றும் கூறுகின்றனர். ஆனாலும், சிலர் மட்டும் தங்கள் பரம்பரைக் கலைத்தொடர்பைத் துண்டித்துக் கொள்ளாமல் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியே உள்ளனர். கல்வியறிவும் குறைவாகவேயுள்ளது. ஆண்கள் பகல்வேடத் தொழிலுக்குச் செல்லும்போது பெண்கள் விவசாயத்தைக் கவனித்துக்கொள்கின்றனர். இவர்களுக்கும் கல்வியறிவு மிகக் குறைவாகவே உள்ளது. கலையில் இவர்கள் கலந்துகொள்வதில்லை. வெளியூர்களுக்கு ஆண்களுடன் செல்லும் பழக்கமும் இல்லை. மிகச் சிலர் படித்து அரசு வேலைகளிலும் தனியார் வேலைகளிலும் உள்ளனர். தொடக்கக் கல்வியில் காட்டும் ஆர்வம் அதற்குமேல் வளருவதில்லை.

***ஐங்கம பண்டாரம் நாடோடிகளின் சமூக வாழ்வியல் பொருளாதார முன்னேற்றம் பெறவும், கல்வியறிவும் வேலை வாய்ப்பும் நாடோடி வாழ்க்கை வாழும் இவர்களுக்கு எளிதாக கிட்டவும், கிறிஸ்துவை அறியும் அறிவு இவர்களுக்கு உண்டாகவும் ஜெபிப்போம்.***


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

# நாங்க வேற மாறி ப்ரோ






பெரியோர்கள் அறிவுரைக்கு அவர்கள் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்கள்; மூத்தவர்களை மதிப்பதில்லை; எந்தவிதமான நோக்கங்களும் அவர்கள் வாழ்க்கையில் இல்லை; பணம் சம்பாதிப்பது ஒன்று தான் அவர்கள் வாழ்க்கையில் குறி; பணம், சுயநலம், சுய விருப்பத்தின் அடிப்படையிலான இச்சைக்கு தீனி போடுவது போன்றவைகள் தான் அவர்கள் வாழ்வை இயக்குகின்றன; அவர்களுடைய ஒரே வழிகாட்டி கூகுள் மற்றும் இன்ஸ்டாகிராம்; தற்கொலை செய்வது என்றால் கூட கூகுளில் எப்படி தற்கொலை செய்வது என்று தேடுகிறார்கள் இன்றைய தலைமுறை என்றே நடப்பவைகளைக் கொண்டு முடிவுக்கு வர வேண்டியதாயிருக்கிறது. அதன் விளைவுகள் இன்றைய 2K கிட்ஸ் எனப்படும் Genzi தலைமுறை தறிகெட்டு பயணிப்பது பலருக்கும் கவலையளிப்பதாக இருக்கிறது என தினசரி செய்தித்தாள்களில் பிரதிபலிக்கின்றன.

சின்னஞ்சிறு குழந்தைகளை கூட்டு வன்புணர்வு செய்கின்றனர் இன்றைய தலைமுறையினர். காதலிக்க மறுத்த காதலியை துடிக்கத்துடிக்க கொல்கிறார்கள். தோல்வி வந்தால் தற்கொலை உடனே செய்கிறார்கள். விருப்பமான அலைபேசி வாங்கி கொடுக்கவில்லை என்றால் கூட, வீட்டை விட்டு ஓடி விடுகிறார்கள்! கடன் எளிதாக கிடைக்கிறது என்று அளவுக்கு அதிகமாக வாங்கி விட்டு, பின்னர் திரும்பக் கட்ட முடியாமல், குடும்பத்துடன் தற்கொலை செய்கிறார்கள். பிஞ்சு குழந்தைகளை அடிக்கிறார்கள், கதறக் கதற கொல்கிறார்கள்.

அவர்கள் அப்படி இருப்பதற்கு முக்கிய காரணம், அவர்களை வழிநடத்த ஒரு சரியான ஆன்மிக தலைவர் இல்லாததுதான். இருள் உலகில் வாழும் சினிமா நடிகர்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் பணத்திற்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். அவர்களைப் பார்த்து கற்றுக்கொள்ள ஒன்றும் கிடையாது.

ஆக, இளம் தலைமுறையினருக்கு அவர்களை நல்வழிப்படுத்த, அவர்களை நேசிக்க, எப்போதும் அவர்களுடன் இருக்க, ஒரு நல்ல ஆவிக்குரிய தலைவர் தான் தேவை.

நல்ல தலைவர் என சொல்ல வேண்டும் என்றால் அவர்தான் இயேசு கிறிஸ்து. அவருடைய போதனைகள் மதங்களுக்கு அப்பாற்பட்டவை. மனித குலத்திற்கே பொதுவானவை. மேலும் அவர் போதனைகள் நடைமுறையில் செயல்படுத்தபடக்கூடியவை. அவைகள் இளம் தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் போதனைகள். திசை தெரியாமல் தவிக்கும் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டும் போதனைகள்.

அன்பு - இயேசுகிறிஸ்து எல்லோரிடமும் அன்பு காட்ட சொல்லி போதித்திருக்கிறார். எந்த அளவு அன்பு காட்ட வேண்டுமென்றால் 'உன் எதிரியையே நீ நேசிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். இது, வீண் வெறுப்பையும், பழிவாங்குதலையும் போதிக்கும் திரைப்படங்கள், டிவி தொடர்கள் போன்றவற்றின் தாக்கத்தை குறைக்க உதவும்.

மன்னிப்பு - தன்னை சிலுவையில் அறைந்து கொன்றவர்களையே மன்னித்தவர் இயேசு கிறிஸ்து.' பிதாவே,இவர்களை மன்னியும். இவர்கள் செய்கிறது என்னவென்று அறியாதிருக்கிறார்களே!' என்று சொன்னார் இயேசு கிறிஸ்து. இப்போதைய இளைஞர்கள், தான் காதலித்த பெண்ணையே கொலை செய்யும் அளவுக்கு வெறி கொண்டு அலைகிறார்கள். அவர்களுக்கு இந்த போதனை ஒரு நல்வழி காட்டும்.

கோபம் - கோபப்படுவதற்கு எதிராக போதித்திருக்கிறார் கிறிஸ்து.

தன்னின்பம் - இந்த இச்சையுணர்வு இப்போது தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இதன் தாக்கத்தால் தினமும் பல பெண்களும், சிறு குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள். இயேசு,'ஒரு பெண்ணை நீ காமக் கண்ணோடு பார்த்தாலே, நீ அவளுடன் விபச்சாரம் செய்து விட்டாய் என்று

பொருள்' என்று கூறியிருக்கிறார். அந்த அளவு பெண்களை கண்ணியத்தோடு பார்க்க வேண்டும் என்று போதித்திருக்கிறார். வயதில் மூத்த பெண்ணை, அம்மாவாகவும் அக்காவாகவும் பார்க்க வேண்டும், வயதில் இளைய பெண்ணை தங்கையாக பார்க்க வேண்டும் என்றும் வேதாகமம் சொல்லுகிறது.

ஏழைகளுக்கு பரிவு - ஏழையிடம் அன்பு காட்ட சொல்லி பலமுறை போதித்திருக்கிறார். நம்மிடம் இருப்பதை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

சமத்துவம், சகோதரத்துவம் - இன்றைய நாளில் சாதிய மத வேறுபாடுகள் நாட்டில் மேலோங்கி நிற்கின்றன. இதனால் எப்போதும் சமூக பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கிறது. இயேசுவின் போதனைகள் ஒரு சமூக ஒற்றுமையை உண்டாக்கும்.

வெற்றியும் தோல்வியும் ஆண்டவரே தீர்மானிப்பார் - இந்த போதனையினால் தோல்வியடைந்தாலும், அது ஆண்டவரின் சித்தம் தான் என்று மனம் அமைதி பெறும். தோல்வியால் தற்சோர்வடைந்த இளைஞர்கள் தற்கொலையை நோக்கி செல்ல மாட்டார்கள்.

மற்றவர்களுக்காக ஜெபிப்பது - மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போது,அவர்கள் பிரச்சினை நமக்கு என்னவென்று தெரியும். ஆதலால் நாம் அவர்களுடன் சுமுகமாக பழகலாம். அன்பு காட்டலாம்.

எதைக் குறித்தும் கவலைப்படாதே - ஆண்டவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் எனும் போதனை , நாம் எதைக் குறித்தும் ரொம்ப கவலைப்பட வேண்டாம் என்பதை உணர்த்தும்.

சட்டத்துக்கு கட்டுப்படுதல் - இயேசு கிறிஸ்து ஆண்டவரே ஆனாலும் அரசு அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டார். சட்டத்திற்கு கட்டுப்பட்டு வரி கட்டினார். இளைய தலைமுறைக்கு அவர் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக திகழ்ந்தார்.

பொய் சொல்லக்கூடாது, கையூட்டு வாங்கக்கூடாது, குறுக்கு வழியினால் நம் நோக்கத்தை அடையக்கூடாது போன்ற பல நல்லொழுக்க போதனைகளை இயேசு சொன்னார்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளை பள்ளிப் பாடங்களாக சொல்லிக் கொடுத்தால், நிச்சயமாக அது பள்ளி மாணவர்களிடையே ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்கும். அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை நிச்சயமாக குறைக்கும். அவர்களிடம் அன்பை விதைக்கும். ஒற்றுமையை வளர்க்கும். மனத்தில் ஒரு அமைதியை உருவாக்கும்.

**வளரும் பதின்ம வயதினருக்காக, அவர்கள் நடுவில் வலுவான செயல்திட்டங்களோடு ஊழியங்கள் நடைபெற, இளையோரை ஆதாயப்படுத்துவதில் திருச்சபைகள் கூடுதல் கவனம் செலுத்த ஜெபிப்போம்.**




***தேவனுக்குரியது:***

***கர்த்தருடைய ஊழியர்கள் அறிந்துகொண்ட வேத சத்தியங்களை ஞானமாய் எவ்வித பயமுமின்றி சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு கர்த்தருடைய ஊழியர்களுக்கு பரிசுத்தாவியானவர் உதவிடும்படியாக ஜெபிப்போம் (அறிக: தனக்காக இப்படி ஜெபிக்கும்படி பவுலே கேட்டுள்ளார். – எபேசியர் 6:20).***

***மேலும், தனிப்பட்ட ரீதியாக நீங்கள் அறிமுகமான இந்திய ஊழியர்களுக்காகவும், வேதாகம நண்பர்களுக்காகவும் ஜெபிப்போம்.***

***மனிதருக்குரியது:***

***ஆட்சியாளர்கள் கிறிஸ்தவத்திற்கு எதிரானவர்களாக இருந்தாலும், அவர்கள் இரட்சிக்கப்படுவதற்காக நாம் ஜெபிக்க வேண்டும் (அறிக: எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். – 1 தீமோ. 2:4).***

***தமிழ்நாட்டில் இளைஞர்களை உள்ளடக்கிய அமைச்சரவையைக் கொண்ட புதிய ஆட்சி மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க ஜெபிப்போம்.***

# அழகாய் நிற்கும் யாரிவர்கள்?

இந்தியாவில் பல்வேறு துறைகளில் பணியாற்றிய இந்த மூன்று நபர்களும், தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக நின்றதினிமித்தம் விமர்சனங்களையும், இழப்புகளையும், ஏன் மரணத்தின் வாசனையையும் கூட நுகர்ந்திருக்கிறார்கள்.

**1. நீதியரசர் குரியன் ஜோசப் (முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி)**

இந்தியவின் உச்ச நீதிமன்றத்தின் நீதியரசராகப் பணியாற்றிய ஜஸ்டிஸ் குரியன் ஜோசப் அவர்கள், கிறிஸ்துவின் மீதான தனது விசுவாசமேதான் நடுநிலை தவறாமல் தீர்ப்பு வழங்குவதற்கு காரணம் என வெளிப்படையாக பொதுவெளியில் பகிர்ந்த கருத்தின் அடிப்படையில் குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கில் கண்கொத்திப் பாம்பாக இவரைப் பின்தொடர்ந்த மதவாத சக்திகளின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளானார். இதற்கு முன்பு கர்நாடகாவின் நீதியரசர் மைக்கேல் குன்ஹா இதைப்போலவே நெருக்கடிக்கு உள்ளானார் என்பதை நாம் அறிவோம்.



2015-ம் ஆண்டு, புனித வெள்ளி அன்று டெல்லியில் நீதிபதிகளுக்கான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் தானொரு பக்தி வைராக்கியமான கிறிஸ்தவராக இருப்பதால் கிறிஸ்துவின் பாடு மரணங்களை நினைவுகூறும் புனித வெள்ளி தினத்தன்று சபை கூடிவருவதை தவிர்த்து விட்டு, தன்னால் நீதித்துறை பணி நிமித்தமான கொண்டாட்டங்களில் பங்கேற்க முடியாது என்றும், ''மதச்சார்பின்மை என்பது சமய நினைவு நாட்களை மதிக்காமல் இருப்பதல்ல, மாறாக அனைத்து சமயங்களின் புனித நாட்களுக்கும் சம உரிமை அளிப்பதே'' என்று கூறி, அன்றைய தினம் நிகழ்வில் தம்மால் பங்கேற்க இயலாதென மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதமொன்றை எழுதினார்.

இதன் காரணமாக அவர் பல்வேறு அரசியல் மற்றும் ஊடகத் தரப்பினரால் விமர்சிக்கப்பட்டார். அவர் தனது கடமையை விட மதத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாக குற்றம் சாட்டப்பட்டார். இருப்பினும், அவர் தனது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று, இந்தியாவில் தமது சமயச் சுதந்திர உரிமையை தைரியமாக முன்னிறுத்தி விசுவாச வாழ்வில் உறுதிபட நின்றார்.

**2. லெப்டினன்ட் சாமுவேல் கமலேசன் (இந்திய இராணுவ கட்டளை அதிகாரி)**

இளம் இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் சாமுவேல் கமலேசன், தனது விசுவாசக் கொள்கைக்காகத் தனது வேலையையே இழந்தார்.

இந்திய இராணுவத்தின் 3-வது குதிரைப்படைப் பிரிவில் பணியாற்றிய இவர், ஒவ்வொரு வாரமும் நடைபெறும் ஜெப ஆராதனையில் தவறாது கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமது படைப்பிரிவின் சார்பில் சீக்கியர்களின் கோவிலான குருத்வாராவின் கருவறைக்குள் சென்று இராணுவத்தின் சார்பில் மேலதிகாரிகளின் உத்தரவின்படி பூஜை வழிபாடு செய்ய மறுத்தார்.



''எனக்கு ஒரே ஆண்டவர் உண்டு, எனது தனிப்பட்ட நம்பிக்கைகளுக்கு எதிரானவற்றை வணங்கவோ, வழிபாட்டில் ஈடுபடவோ நான் கொண்டிருக்கும் கிறிஸ்தவ விசுவாசம் என்னை அனுமதிக்காது; இராணுவப் பணியில் நான் கடமை தவறாதிருக்கிறேனா என்பதே கவனிக்கப்பட வேண்டிய விஷயமாதலால் பிற நம்பிக்கைகளை நான் பின்பற்ற என்னை வலியுறுத்துவது தனியுரிமை மீறல் என்பதை அவரது நிலைப்பாடாக கொண்டிருந்தார். பிறர் மனம் நோகாமலிருக்க அவர் கோவிலுக்கு வெளியே நின்று இராணுவ அதிகாரிக்கான மரியாதையை வெளிப்படுத்தினாரே தவிர, உள்ளே சென்று பூஜை செய்ய மறுத்தார்.

இதை ''கடும் ஒழுங்கீனம்'' என்று இராணுவம் கருதியது. இதன் விளைவாக, 2021-ல் அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். இதற்கான ஓய்வூதிய பலன்களும் மறுக்கப்பட்டன. நவம்பர் 2025-ல் உச்ச நீதிமன்றமும் அவரது பணிநீக்கத்தை உறுதி செய்ததன் விளைவாக கிறிஸ்துவின் மீதான தனது விசுவாசத்தை முதன்மையாகக் கருதி தனது இராணுவப் பணியையும், எதிர்காலத்தையும் அவர் தியாகம் செய்ய முன்வந்தார்.

### 3. சுசில் நத்தனியேல்

மத்தியப் பிரதேச மாநில ஆயுள்காப்பீட்டு நிறுவனத்தின் (LIC) மேலாளரான சுசில் நத்தனியேல், தனது விசுவாசத்தை கைவிட மறுத்ததால் கிறிஸ்துவின் மீதான விசுவாசத்திற்காக சுட்டுக் கொல்லப்பட்டார். ஏப்ரல் 2025-ல், சுசில் நத்தனியேல் தனது குடும்பத்துடன் காஷ்மீரின் பஹல்காம் பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்தார். அப்போது மதத் தீவிரவாதிகள் அவர்களை வழிமறித்தனர். இஸ்லாமிய அடிப்படைவாதிகளான அத்தீவிரவாதிகள் அவரிடம் அவரது மதம் என்னவெனக் கேட்டு, இஸ்லாமிய விசுவாசப் பிரமாணமான 'கலிமா'வை வாயால் சத்தமிட்டுச் சொல்ல வற்புறுத்தினர். துப்பாக்கி முனையில் தான் நின்றபோதும், அவர் தான் ஒரு கிறிஸ்தவர் என்றும், தனக்கு வேற்று மத நம்பிக்கைகளை உச்சரிக்க இயலாது என்றும் உறுதியாகக் கூறி அவர் தனது விசுவாசத்தில் உறுதியாக நின்றதால் கடும் சினமுற்ற தீவிரவாதிகள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். தனது குடும்பத்தின் கண்முன்னே, ஆண்டவருக்காகத் தன் உயிரையே விலையாகக் கொடுத்தார்.



இவர்கள் மூவரும் வெவ்வேறு சூழ்நிலைகளில் ஒருவர் நீதித்துறையில், ஒருவர் இராணுவத்தில், ஒருவர் நிறுவனத்தின் மேலாளராக இருந்த போதிலும் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நல்லப் போராட்டத்தை முன்னிறுத்திப் போராடினார்கள். ''மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்'' (மத்தேயு 10:32) என்ற வசனம் இவர்களது நம்பிக்கைக்கு வலு சேர்க்கிறது. **சோதனைக் காலத்தில் நாம் எப்படி?**


## கிறிஸ்துவில் வளர பயன்படுத்திக் கொள்ளுங்கள்



திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள **அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபத்தில்** உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காக சில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

நீங்கள் தனி நபராகவோ, குடும்பமாகவோ அல்லது குழுவாகவோ உபவாசமிருந்து ஜெபிக்க தனித்தனி அறைகள் அங்கே உண்டு. தேவ பிரசன்னம் நிறைந்துள்ள இயற்கை எழில் வாய்ந்த சூழல். அமைதியை விரும்புவோர்களுக்கான தனித்துவமான இடம். எனவே நீங்கள் கர்த்தருக்குள்ளான உறவிலும் ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளரவும் பெலனடையவும் விரும்பினால் இந்த வளாகத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஊழியம் / திருச்சபை சார்ந்த முகாம்கள், கருத்தரங்குகள், வாலிபர் கூட்டங்கள், உபவாச முகாம்கள், Family retreat போன்ற கூடுகைகள் நடத்தவும், சபை வேறுபாடின்றி யாவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வருடத்தில் 365 நாட்களும் 24X7 நேரமும் உங்களுக்காக இந்த ஜெப மையம் திறந்தே இருக்கும். மனப்பூர்வமான சிறு காணிக்கைக் கொடுத்து இதை பயன்படுத்திக் கொள்ளலாம். அனுமதி மற்றும் விபரங்களுக்கு

**+91 9003067777, 9884908777**

எண்ணில் தொடர்பு கொள்ளவும்.



அன்புடன்

**போதகர் ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# ஜான் ஜி பேட்டன்



ஜான் கிப்சன் பேட்டன் ஜேம்ஸ் பேட்டன் மற்றும் ஜேனட் பேட்டனுக்கு மூத்த மகனாக மே *24, 1824* அன்று தென் ஸ்காட்லாந்தில் டம்ஃப்ரைஸ் அருகே பிறந்தார்.

அவருக்கு ஐந்து வயதாக இருந்தபோது, அவரது பெற்றோர் வேறொரு கிராமத்திற்கு குடிபெயர்ந்து ஒரு சிறிய குடிசையில் வசித்து வந்தனர், அங்கு அவர்கள் அடுத்த நாற்பது ஆண்டுகள் தங்கியிருப்பார்கள். அவரது பெற்றோர் வசதி குறைவாகவே இருந்தனர், ஆனால் பதினொரு குழந்தைகளுடன்-ஐந்து மகன்கள் மற்றும் ஆறு மகள்களுடன் ஆசீர்வதிக்கப்பட்டனர்-அவர்களில் ஜான் கிப்சன் பேட்டன் மூத்தவர்.

ஜான் தனது பன்னிரெண்டு வயது வரை ஒரு பாரிஷ் பள்ளியில் படித்தார், அவர் தனது தந்தையின் வர்த்தகத்தை கற்கத் தொடங்கினார், அவர் காலுறைகள் தயாரிப்பாளராக இருந்தார். ஒரு நாளைக்கு பதினான்கு மணிநேரம், ஜான் தனது தந்தையின் பட்டறையில் ஆறு ஸ்டாக்கிங் பிரேம்களில் ஒன்றை இயக்கினார், அதே நேரத்தில் உணவு நேரங்களுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு மணிநேரங்களை தீவிர ஆய்வுக்காக அர்ப்பணித்தார்.

நற்செய்தியின் ஊழியராக அழைக்கப்பட்டதை அறிந்த ஜான், தன்னைத் திட்டத் துறைக்குத் தயார்படுத்திக் கொண்டார். அவர் கிளாஸ்கோவில் ஊதியம் பெறும் பதவிக்கு விண்ணப்பித்தார், அங்கு அவர் ஒரு மாவட்ட பார்வையாளர் மற்றும் பாதை விநியோகஸ்தராக இருப்பார், அதே நேரத்தில் இலவசமாக சர்ச் செமினரியில் ஒரு வருட பயிற்சியையும் பெற்றார், அவர் கற்பித்தல் மற்றும் ஊழியத்தை நோக்கி பணியாற்றுவதில் தகுதி பெறலாம். கடிதம் கிடைத்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு தம் குடும்பத்தை விட்டு வெளியேறத் தயாரானபோது அவர் ஆச்சரியப்பட்டார்.

வீட்டை விட்டு வெளியேறியதும், ஜான் தனது பைபிள் உட்பட பூமிக்குரிய உடைமைகள் அனைத்தையும் தனது பையில் கட்டினார். கர்த்தர் தன்னுடன் இருந்ததால் அவர் தன்னை வறுமையில் இருப்பதாக எண்ணவில்லை. அவர் கில்மார்நோக்கிற்கு நாற்பது மைல் தூரம் நடந்து செல்வார், அங்கு அவர் கிளாஸ்கோவிற்கு ஒரு ரயிலில் செல்வார். அவரது தந்தை வழியில் முதல் ஆறு மைல்கள் அவருடன் நடந்து சென்றார். இந்த நிகழ்வு நடந்த நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஜான் ஜி. பேட்டன் எழுதியதை விட இந்த கணக்கை அழகாக எழுத முடியவில்லை. அவர் மனப்பூர்வமாகவும் அன்பாகவும் சொன்னார்: ‘‘என் மகனே, கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்! உங்கள் தந்தையின் தேவன் உங்களைச் செழிப்பாக்குவார், உங்களை எல்லா தீமைகளிலிருந்தும் காப்பாற்றுவார்! ’’

கிளாஸ்கோவிற்கு வந்ததும், ஜான் செமினரி வகுப்புகளில் கலந்துகொண்டு தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இருப்பினும், முதல் வருடம் நிறைவடைவதற்கு முன்னர், கடுமையான வேலை காரணமாக அவரது உடல்நிலை சரிந்தது, மேலும் அவர் குணமடைய வீட்டிற்கு பயணம் செய்ய வேண்டியிருந்தது.

கிளாஸ்கோவுக்குத் திரும்பிய சிறிது நேரத்தில், அவர் கல்லூரியில் சேர்ந்தார். செமஸ்டர் முடிவதற்குள், அவர் பள்ளியை விட்டு விட்டு ஓடிவிட்டார், மேலும் அவரது கல்விக் கட்டணத்தை செலுத்த முடியவில்லை. அவர் தனது வாழ்க்கையை விட்டுவிட்டு, வெளியில் வேலை தேடுவதற்காக வருத்தத்துடன் கிட்டத்தட்ட அலைந்தார், மேலும் அவர் தங்குவதற்காக தனது புத்தகங்களை கிட்டத்தட்ட விற்றார், ஆனால் அவரால் தன்னை அவ்வளவு எளிதில் விட்டுவிட முடியவில்லை.

பள்ளி ஒரு மோசமான நிலையில் இருந்த பள்ளி என்றும், மாலை வகுப்புகளில் கலந்து கொண்ட பல மாணவர்கள் சிக்கலில் சிக்கியதால் அவர்கள் இழிவானவர்கள் என்றும் அவர்களை கண்டிப்பாய் நடத்தும் படியும் ஜான் எச்சரிக்கப்பட்டார். அவர் மறுநாள் அதிகாலையில் பணிக்கு வந்தார், அவருக்கு மாணவர்களை தண்டிக்க ஒரு கம்பு வழங்கப்பட்டது, அதன்பிறகு அதை அடிக்கடி பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டார். இருப்பினும், அவர் கம்பை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தினார், அதுவே கடைசியுமாகும். அடுத்த வாரங்கள் மிகவும் கடினமானவை என்றாலும், இளம் பேட்டன் பள்ளி மாணவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார், அவர் ஒழுங்கையும் கீழ்ப்படிதலையும் அன்பினால் அறிவித்தார், பயங்கரவாதத்தால் அல்ல. இது பள்ளிக்கு ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது, அது செழித்து வளர காரணமாக அமைந்தது.

ஒரு பருவத்திற்கு கற்பித்தபின், ஜான் கிளாஸ்கோவின் கீழ் முனையில் ஒரு நகர மிஷனரியாக தனது வாழ்க்கையைத் தொடங்கினார், அது எந்தவொரு மக்களையும் பயன்படுத்தவில்லை. கிளாஸ்கோ பல்கலைக்கழகம் மற்றும் சீர்திருத்த பிரஸ்பைடிரியன் தெய்வீக மண்டபத்தில் தனது இறையியல் ஆய்வுகளையும் மேற்கொண்டார் மற்றும் ஆண்டர்சோனியன் கல்லூரியில் மருத்துவ வகுப்புகளை எடுக்கத் தொடங்கினார்.

ஜான் பேட்டன் ஸ்காட்லாந்தில் தனது மிஷனரி வாழ்க்கையைத் தொடர்ந்தபோது, ஜான் தென் கடலில் அழிந்துபோன புறஜாதிகளின் அழுகையைக் கேட்டுக்கொண்டே இருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாக, அவர் கலந்துகொண்டிருந்த மற்றும் உறுப்பினராக இருந்த தேவாலயம் ஒரு மிஷனரிக்கு நியூ ஹெப்ரடிஸ் சென்று ஒரு ரெவ். ஜான் இங்கிலிஸுடன் சேர பூர்வீக மக்களிடையே தனது பணியில் விளம்பரம் செய்து கொண்டிருந்தது, ஆனால் எந்த மிஷனரியும் காணப்படவில்லை .

தனது முப்பத்திரண்டு வயதில், தென் கடலில் நியூ ஹெப்பரடிஸ் தீவுக் கூட்டத்தில் வாழும் மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்பதில் ஜான் பேட்டனின் இதயம் சுமையாக இருந்தது,. கிளாஸ்கோவில் உள்ள பலர் மாவட்டத்தில் தனது பணிப் பணிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதை அவர் அறிந்திருந்தார், ஆனாலும் அவர் தனது இதயத்தில் இருப்பதை யாரிடமும் சொல்லவில்லை, பல நாட்களாக அவர் இறைவனின் விருப்பத்தை நாடினார்.

'நீங்கள் நரமாமிசங்களால் சாப்பிடுவீர்கள்!' ஒரு மரியாதைக்குரிய பெரியவர் கூச்சலிட்டார், அதற்கு பாட்டன்: 'திரு. டிக்சன், நீங்கள் இப்போது பல ஆண்டுகளில் முன்னேறியுள்ளீர்கள், உங்கள் சொந்த வாய்ப்பு விரைவில் கல்லறையில் வைக்கப்பட உள்ளது, அங்கே புழுக்கள் சாப்பிட வேண்டும்; கர்த்தராகிய இயேசுவை சேவிப்பதற்கு என்னால் வாழ்ந்து இறந்துபோக முடிந்தால், நான் நரமாமிசத்தினரால் அல்லது புழுக்களால் உண்ணப்படுகிறேனா என்பதில் எனக்கு எந்த வித்தியாசமும் இல்லை என்று நான் உங்களிடம் ஒப்புக்கொள்கிறேன்; பெரிய நாளில், என் உயிர்த்தெழுந்த மீட்பரின் சாயலில் என் உயிர்த்தெழுதல் உடல் உங்களைப் போலவே நியாயமாக உயரும். பதிலளித்தார்.''

எல்லோரும் அவருக்கு எதிரானவர்கள் என்று தோன்றினாலும், ஜானின் பெற்றோர் முழு நேரமும் ஆதரவாக இருந்தனர். இது இறைவனிடமிருந்து அவர் பெற்ற அழைப்பிற்கு உண்மையாகவும் கீழ்ப்படிதலுடனும் இருக்க அவரை ஊக்குவித்தது, குறிப்பாக அவரது பெற்றோரால் அவருக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் ஜானுக்கு ஒரு கடமை உணர்வும், அழைப்பும் அவனுக்குள் ஒருபோதும் திரும்பிப் பார்க்காத தைரியமான தைரியத்தை உருவாக்கியது.

ஏப்ரல் 2, 1858 இல், ஜான் ஜி.பேட்டன் மேரி ஆன் ராப்சனை மணந்தார். பதினான்கு நாட்களுக்குப் பிறகு, அவர்கள் வனுவாட்டுக்கு அருகிலுள்ள அனீடியம் என்ற தீவில் உள்ள மிஷன் ஸ்டேஷனுக்கு

ஒன்றாகப் பயணம் செய்தனர், அவர்கள் ஆகஸ்ட் 30 அன்று அடைந்தனர்.இந்த ஜோடி விரைவில் தன்னா தீவில் ஒரு புதிய நிலையத்தை நிறுவ அனுப்பப்பட்டது, அதன் பூர்வீகவாசிகள் சந்தன மர வணிகர்களால் தவிர, மேற்கத்திய நாகரிகத்தால் முற்றிலும் தீண்டத்தகாதவர்கள்.

ஆகவே, அவரும் அவரது இளம் மனைவியும் அங்குள்ள நிர்வாணமாக வாழும் வர்ணம் பூசப்பட்ட வனவிலங்குகளாலும் நிறைந்த ஒரு தீவில் முதல் வெள்ளை குடியிருப்பாளர்கள் ஆனார்கள். நரமாமிசவாதிகள்-அவர்கள் சரி அல்லது தவறு பற்றி எதுவும் தெரியாதவர், ஏராளமான கடவுள்களை வணங்குகிறார்கள், அதற்கு பயப்படுகிறார்கள், தீய சக்திகளின் தொடர்ச்சியான அச்சத்தில் வாழ்ந்து, தொடர்ந்து போராடுகிறார்கள் தங்களுக்குள், எப்போதும் கொல்லப்பட்டவர்களின் உடல்களை சாப்பிடுகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையின் மதிப்பைப் பற்றி சிறிதும் அக்கறை காட்டவில்லை, மற்றவர்களிடம் பரஸ்பர இரக்கமும் கடமையும் இல்லை.

பிப்ரவரி 12, 1859இல், ஜான் பேட்டன் - மேரி தம்பதியர்க்கு ஒரு மகன் பிறந்தார், அவர்களுக்கு பீட்டர் ராபர்ட் ராப்சன் என்று பெயரிட்டனர். இருப்பினும், மார்ச் 3 ஆம் தேதி, மேரி பாட்டன் திடீரென நிமோனியா தாக்குதலால் இறந்தார், பின்னர் மார்ச் 20ஆம் தேதி அவர்களின் ஆண் குழந்தையும் அவரைப் பின்தொடர்ந்து மரணம் அடைந்தது.

உதவியற்ற நிலையில் தனியாக, ஜான் தனது அன்பான மனைவியையும் அவர்களின் குழந்தை மகனையும் தனது கைகளால் புதைத்து, அவர்களின் கல்லறைகளை அழகான வெள்ளை பவளத்தால் மூடினார். அந்த இடம் அவர் அடிக்கடி வந்த இடமாக இருந்தது, அதன்பிறகு அவர் பிரார்த்தனை செய்து, தனது மனைவி மற்றும் குழந்தைக்காக துக்கமடைந்தபின், தீவு பூர்வீக மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஜான் பேட்டன் அடுத்த நான்கு ஆண்டுகளில் கடுமையாக உழைக்கத் தொடங்கினார். அவர் தனது உயிருக்கு தொடர்ந்து அச்சத்தில் இருந்தார், ஆனாலும் அவரது நம்பிக்கையின் மீது அவரை மிகவும் அச்சுறுத்தும் மற்றும் பயமுறுத்தும் சூழ்நிலைகளில் தக்கவைத்துக் கொண்டார்.

'நான் இறக்க பயப்படவில்லை' என்று நான் அவர்களுக்கு உறுதியளித்தேன், ஏனென்றால் மரணத்தில் என் இரட்சகர் என்னை தன்னுடன் பரலோகத்தில் இருப்பதற்கும், நான் பூமியில் இருந்ததை விட மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் என்னை அழைத்துச் செல்வார் ... இயேசுவில் நான் அழியாத மற்றும் அழியாதவனாக உணர்ந்தேன், இவ்வளவு காலம் நான் அவருடைய வேலையைச் செய்துகொண்டிருந்தபோது... நான் என் கைகளையும் கண்களையும் பரலோகத்திற்கு உயர்த்தி, இயேசுவிடம் உரக்க ஜெபம் செய்தேன்... 'என்னைப் பாதுகாக்க அல்லது என்னை மகிமைக்கு அழைத்துச் செல்லும்படி அவர் சிறந்தவராகக் கண்டு வேண்டினேன்.

ஜான் ஜி.பேட்டன் அனாதை இல்லங்களை கட்டினார், இறுதியில் இயேசுவுக்கு இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க அவற்றைப் பயன்படுத்தினார். அவரது மனைவி சுமார் ஐம்பது பெண்கள் மற்றும் சிறுமிகளைக் கொண்ட ஒரு வகுப்பைக் கற்பித்தார், மேலும் அவர்கள் தையல், பாடுதல் மற்றும் தொப்பிகளை நெசவு செய்தல் மற்றும் வாசித்தல் ஆகியவற்றில் நிபுணர்களாக மாறினர். அவர்கள் ஒன்றாக ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தனர், வேதவசனங்களை மொழிபெயர்த்து அச்சிட்டனர், நோயுற்றவர்களுக்கும் இறக்கும் நபர்களுக்கும் ஊழியம் செய்தனர், ஒவ்வொரு நாளும் மருந்துகளை விநியோகித்தனர், மக்களுக்கு கருவிகளைப் பயன்படுத்துவதைக் கற்பித்தனர்,

1897ஆம் ஆண்டில் அனிவா மொழியில் புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். அவர் இறக்கும் நாள் வரை, அவர் துதிப்பாடல்களை அணிவா மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார், அவர்களுடன் இருக்க முடியாதபோது கூட அந்த மக்களுக்கு ஒரு அகராதியை உருவாக்கினார்.

மிஷனரி ஜான் பேட்டன் எண்பத்து மூன்று வயது வரை வாழ்ந்தார், இறைவனின் வாக்குறுதி அவரை ஒருபோதும் தோல்வியடையச் செய்யவில்லை. 1907ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி ஜான் பேட்டன் இறந்தார், போரொண்டரா கல்லறையில் அவர் நல் அடக்கம் செய்யப்பட்டார்.

# தேவவரம்



தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் மைலாடியில் மகாராஜன் வேதமாணிக்கம் இவர்களின் மகனாக 1802-ம் ஆண்டு பிறந்த தேவவரம் தனது தம்பி சிவனன் மற்றும் மிஷனெரி ரிங்கல்தௌபே வழிகாட்டுதலில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். புத்தூல்ப் என்பது கிறிஸ்தவ ஞானத்தகப்பனின் பெயர்.

1809-ம் ஆண்டு போதகர் ரிங்கல்தௌபே முதன் முதலாக மயிலாடியில் தொடங்கிய ஆங்கிலப் பாடசாலையில் பயின்றார் தேவவரம். 1819-ம் ஆண்டு நாகர்கோவிலில் சார்ல்ஸ் மீட் தொடங்கிய இறையியல் பள்ளியில், அது தொடங்கப்பட்ட ஆண்டில் படித்த மாணவர்களுள் தேவவரமும் ஒருவர். இறையியல் மற்றும் ஆங்கிலக்கல்விக்காக தேவவரம் தஞ்சாவூர், கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களுக்குச் செல்ல மீட் உதவினார். ஜான் பால்மர் தமிழ் கற்றுக்கொண்ட திருவம்பலத் திண்ணமுத்தம் பிள்ளையிடம் தேவவரமும் தமிழ் கற்றார்.

தேவவரம் சென்னையில் படிப்பை முடித்த பின் சார்ல்ஸ் மீட்டின் உதவியாளராக நாகர்கோவிலில் பணியாறினார். சார்ல்ஸ் மீட் நெய்யூரில் பணியாற்றியபோது அங்கே அவருடைய உதவியாளராகப் பணியாற்றினார்.

மார்த்தாண்டம் மத்திகோடு சபையில் வேதமாணிக்கத்தால் மதம் மாற்றப்பட்ட முதல் சீர்திருத்தக் கிறிஸ்தவரான மாடன் மார்த்தாண்டனின் மகன் வேதமாணிக்கம் போதகர் தலைமையில், கொத்தனார்விளை ஆலயத்தில், தேவவரம் முன்ஷியின் மூத்த மகளான லோய்ஸ் புத்தூல்ப்பை சார்ல்ஸ் மீட் 1851-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருமணம் செய்துகொண்டார். இத்திருமணத்தினால் ஏற்பட்ட எதிர்ப்பால் தம் பதவியை இராஜினாமா செய்த மீட் திருவனந்தபுரத்திற்குச் சென்று திருவிதாங்கூர் ரெஸிடெண்டின் உதவியாளராக ஆனார். தேவவரம் முன்ஷியும் அவருடன் சென்று திருவனந்தபுரத்தில் வாழ்ந்தார்.

திருவனந்தபுரம் கிறிஸ்துநாதர் ஆலயத்தின் தமிழ் வழிபாடு நடத்தும் பொறுப்பைப் பல ஆண்டுகள் ஏற்று நடத்தினார். இறுதிக்காலத்தில் மகனின் மரணம் இவர் உள்ளத்தை சோர்வடையச் செய்தது. லண்டன் மிஷன் சபையின் எதிர்ப்பும் தனிமைகொள்ளச் செய்தது. காரணங்களால் சில கையெழுத்துப் பிரதிகள் முடிவடையவில்லை.

தேவவரம் புகழ்பெற்ற கவிஞராகவும், கிறிஸ்தவ இறையியல் அறிஞராகவும் திகழ்ந்தார். ஜான்பால்மர், நத்தானியேல் செட்டியார், தேவவரம் ஆகியோர் குமரி மாவட்டத்தில் உலக்கை அருவிக்குச் சென்று அசம்பு மலையின் உயரமான பகுதியிலிருந்து ஜெபம் செய்ய ஆரம்பிக்கும்போது ஒருவரிடமும் வேதாகமம் இல்லாததை உணர்ந்து தேவவரம் பைபிளில் இருந்து ஒரு சங்கீதத்தைத் தமிழ்ச்செய்யுளாக உடனே பாடினார் என்றும் அப்பாடல் புகழ்பெற்றிருந்தது என்றும் சொல்லப்படுகிறது. முன்ஷி என்பது மொழியறிஞருக்கான பெயர். தேவவரம் முன்ஷி அவர்கள் தோமுனியார் என்றும் மக்களால் அழைக்கப்பட்டார்.

தேவவரம் முன்ஷியார் எழுதியவற்றுள் ஒன்பது கீர்த்தனைகள் மட்டும் இன்று கிடைக்கின்றன. அவற்றுள் ''அதிமங்கலக் காரணனே'' ''இயேசு நாயகனைத் துதிசெய்'' முக்கியமானவை.

கிறிஸ்தவ நெறிமுறைகளை குறள் வடிவில் தருவது வேதவிதிக்குறள் நூல், இது ஔவையாரின் மூதுரை நூலைப் பின்பற்றி இயற்றப்பட்டது. திருட்டாந்த மாலை நூல், செம்மொழி மாலிகை நூல், ஔவையாரின் ஆத்திச்சூடியைப் போன்று கிறிஸ்தவக் கருத்துகளைச் சுருங்கக் கூறும் சிந்து கவிமாலை நூல், தாவீதின் சங்கீதத்தைப் பாடல் வடிவில்

தரும் நூல், வினாவிடைப் பாடலாக விவிலியச் செய்திகளை கூறும் நல்லறிவின் சாரம் நூல், தமிழ் அகராதி போன்ற நூல்கள் இவரது படைப்புகளில் குறிப்பிடத்தகுந்தவை.

தேவவரம் முன்ஷி வீரமாமுனிவரின் சதுரகராதியைப் பின்பற்றி முழுமையாக்கி சதுரகராதியை எழுதினார். தமிழ்ச் சொற்களின் வேர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் விளக்கும் வகையில் பஞ்சகராதி, வினையகராதி ஆகியவற்றை எழுதினார். வினையகராதி முழுமை பெறாததால் நூல் வடிவம் பெறவில்லை. பைபிள் செய்திகளை அகர வரிசையில் சொல்லும் வேத அகராதி, பைபிள் பெயர்களை அகர வரிசையில் சொல்லும் பெயரகராதி ஆகியவற்றையும் எழுதினார்.

1830-ல் நெய்யூரில் அருள்திரு. மீட் போதகரால் தொடங்கப்பட்ட கைப்பிரதிக் கழகத்தில் செயலர், முதன்மை எழுத்தர், மொழிபெயர்ப்பாளர் போன்ற பதவிகளின் மூலம் 150 வெவ்வேறு தலைப்புகளில் கைப்பிரதிகளை வெளியிட்டார்.

தேவவரம் முன்ஷி திருவனந்தபுரத்தில் டிசம்பர் 28, 1874-ல் காலமானார். அவரது உடல் திருவனந்தபுரத்திலுள்ள கிறிஸ்துநாதர் ஆலயத்திலுள்ளக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.




TOLL FREE 24/7 365 SERVICE

விசுவாச வாழ்விற்குரிய உயிர் உரமூட்டும் ஆன்மீக ஆலோசனைகளுக்கும், ஜெபத்தேவைகள் மற்றும் வழிக்காட்டுதல்களுக்கும் கீழுள்ள கட்டணமில்லா தொலைபேசி (TOLL FREE) எண்ணில் தயக்கமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.

**1800 270 5800**

**உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் ஜெபவீரர் களத்தின் பங்கு இருக்குமெனில்..**

தாங்கள் எவ்விதம் ஆசீர்வதிக்கப்பட்டீர்கள் என்பதை எங்களுக்கு தெரியப்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். ஜெபவீரர் களம் மாத இதழ் உங்களுக்கு அறிமுகமான வேறெவருக்கும் தேவைப்படுமென்றால், அவர்களின் அஞ்சல் முகவரியை தெரியப்படுத்தினால் இதழ் அனுப்பப்படும். இதழை பெறுவதில் தடங்கல் இருப்பின் அல்லது முகவரி மாறியிருந்தால் தற்போதைய சந்தா எண்ணையும் முகவரியையும் 04424840407, 9003067777, 9884916777, 9884908777 எண்களில் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# புவி வளம் விழிப்புணர்வு தினம்

இன்றைய சமூகம் உள்ளங்களிலும், ஊரிலும் அழுக்குகளால் நிரம்பியதாய் மாறிக் கொண்டிருக்கிறது. நெகிழிகள் முதல், உதாசீனப்படுத்துதல் வரை நிலம் பல இன்னல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அன்பும், மனித நேயமும் நிறைந்த மனிதர்கள் அருகி வரும் உயிரினம் போல எங்கேனும் தான் தட்டுப்படுகிறார்கள். மனிதர் மீது அன்பு பாராட்டாதவர்கள் நிலத்தின் மீது எப்படி நேசம் காட்டுவார்கள்? சுயநலத்தின் சாலைகளில் தான் பொதுநலத்தின் சிந்தனைகளும் புதைக்கப் படுகின்றன.

பொதுவில் கிடந்த வளங்கள் வரங்களாய் இருந்தன. அவை சுரண்டப்பட்டு அதிகாரத்தின் பைகளில் பதுங்கியபோது சாபமாக மாறிவிட்டது. மண் வளமே பிற வளங்களைத் தாங்கிப் பிடிக்கிறது. உயிர்களின் இருப்பிட மாகவும், பயிர்களின் பிறப்பிடமாகவும், வாழ்வின் மகிழ்விடமாகவும் இருப்பது நிலமே.

நிலம் என்னுடையது என்கிறார் தேவன் லேவியர் ஆகமத்தில்! நிலத்தை மனிதன் வெட்டிக் கூறுபோட்டு, பூர்வ குடிகளை விரட்டியடிக்கும்போது தேவனின் சினம் நிலத்தின் மீது விழுகிறது.



**இந்த மண் வளத்தை ஏன் நாம் காப்பாற்ற வேண்டும்?**

## நாம் மண்ணின் பாகமாய் இருக்கிறோம்

தேவன் நம்மைப் படைத்தபோது மண்ணிலிருந்து தான் உருவாக்கினார். நமக்குள் மண் இருக்கிறது. மண் தான் மனிதனின் முதல் மூலக்கூறு. தேவனின் உயிர் மூச்சு நமக்குள் உலவுகிறது, மண்ணின் உடல் வடிவம் தான் நமக்குள் நிலவுகிறது. எனவே அடிப்படையிலேயே நாம் மண்ணோடு உறவாய் இருக்கிறோம். அந்த உறவைப் பேணவேண்டியது நமது கடமை!

உருவாகும்போது எப்படி மண் மனிதனாய் மாறியதோ, அதே போல விடை பெறுகையில் மனிதன் மண்ணாகிறான். மண்ணோடு உறவாடுகிறான். மண்ணோடு கலந்து விடுகிறான். மனிதன் மண்ணின் பாகமாய் மாறிவிடுகிறான். சுழற்சி நிறைவு பெறுகிறது. மண்ணினால் துவங்கி, மண்ணுடன் அடங்கிவிடும் வாழ்க்கை முறையையே தேவன் நமக்குத் தந்திருக்கிறார். எனவே மண் வளம் காக்க வேண்டியது நம் கடமையாகும்.

## மண் வளம் காத்தல் நமக்கு தேவன் அளித்த பணி

தேவன் மனிதனுக்கு இட்ட முதல் பணியே நிலத்தைப் பண்படுத்துவதும், பாதுகாப்பதும் தான். ''ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய தேவன் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்''! அது தான் தேவன் மனிதனுக்குக் கொடுத்த முதல் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்.

மண்ணைப் பண்படுத்த மறுக்கும் போது நாம் தேவனின் விருப்பத்தை நிராகரிக்கிறோம். மண்ணை புண்படுத்தும் போது நாம் தேவனையே நிராகரிக்கிறோம்.

நிலத்தைப் பாதுகாப்பது என்பது நிலத்தின் மாண்பினைப் பாதுகாப்பதும், வளத்தினைப் பாதுகாப்பதுமாகும். எப்படி நிலம் மாசுகளால் மலட்டுத் தன்மை ஆகாமல் தடுக்க வேண்டுமோ, அதே போல நிலம் சாத்தானின் ஊடுருவல் இல்லாமலும் தடுக்க வேண்டும். ஆதாம் செய்த பிழைகளையே நாமும் செய்யாமல் கவனமாய் இருக்க வேண்டும்.


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

### மண், தேவன் பிரித்து வைத்த இடம்

தேவன் மனிதனுக்குக் கொடுத்த பணியை மனிதன் செய்யத் தவறியிருக்கலாம். ஆனால் இயற்கைக்குக் கொடுத்த பணியை அவை செவ்வனே செயல்படுத்துகின்றன. கரையைத் தாண்டி வராதே எனும் கட்டளையை ஏற்று கடல் அங்கேயே நிற்கிறது. நிலத்தைத் தனியே பிரித்த தேவன் அதற்குத் தேவையான வளம் தரும் நதிகளையும் தருகிறார்.

நிலத்தைப் பண்படுத்துவதும், பாதுகாப்பதுமே நம்மால் செய்ய இயன்ற பணிகள். ஒரு விதையை முளைக்க வைப்பது தேவனே. விதைப்பதால் ஒரு விதை முளைப்பதில்லை, அதற்குத் தேவையான வளங்களைக் கொடுப்பதால் முளை வருவதில்லை. எல்லாவற்றுக்கும் மேல் தேவ கிருபை தேவைப்படுகிறது. நமது பணி ஐந்து அப்பம் கொடுத்த சிறுவனைப் போன்றது. அதை ஐயாயிரம் பேருக்கு அளிப்பது தேவனின் பணி.

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அதைத் தான். நிலத்துக்காக நாம் வானத்தை இழுத்து வந்து வாய்க்காலில் போடவேண்டுமென அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் தந்ததை காயப்படாமல் காப்பாற்ற வேண்டுமென விரும்புகிறார். மண் தேவனின் கட்டளையைக் கேட்கிறது, நாம் தேவனின் கட்டளைக்குச் செவி சாய்க்கிறோமா?

### மண் தேவனை மகிமைப்படுத்துகிறது!

படைப்புகள் தேவனைப் புகழ்கின்றன. நிலத்தில் முளைக்கும் செடிகளும் கொடிகளும் பூக்களும் கனிகளும் தேவனின் மாட்சியைப் பறைசாற்றுகின்றன. தேவனைப் புகழும் நாவினை நாம் நறுக்கிவிடக் கூடாது. தேவனை நேசிக்கும் இயற்கையை நாம் சிதைத்து விடக் கூடாது. ஒருவரை நாம் நேசிக்கிறோம் என்பதன் அடையாளம் இரண்டு. ஒன்று அவர் சொல்வதைச் செய்கிறோம், இரண்டு அவருக்குப் பெருமை சேர்க்கும் விதமாய் செயல்படுகிறோம்.

தேவன் சொல்வதை நாம் செய்கிறோமா? தேவனுக்குப் புகழ் சேரும் வகையில் செயல்படுகிறோமா? இயேசு வாழ்ந்த காலத்தில் நிலத்தைத் தன் போதனைகளில் பயன்படுத்தினார். தேவனின் ஆசீர்வாதத்தின் அடையாளமாக பழைய ஏற்பாடு விளைச்சலைப் பேசியது!

இயேசு நல்ல நிலமாய் வாழ நமக்கு அழைப்பு விடுத்தார். நாம் நல்ல நிலமாய் இருக்கிறோமா? நம்மிடம் இருக்கும் நல்ல நிலத்தைக் கெட்ட நிலமாய் மாற்றுகிறோமா? இயற்கையை அழகுபடுத்தி, அதன் மூலம் இறைவனை மகிமைப்படுத்துவோம். எல்லாவற்றுக்கும் மேலாய், இயேசு மீண்டும் மண்ணில் வரப் போகிறார். அவரை வரவேற்க மண் புனிதமாய் இருப்பதல்லவா சிறப்பானது!

### மண்வளம் காத்தல், நம் கடமை!

கிறிஸ்தவர்களின் கடமை என்பது கனிகொடுக்கும் வாழ்க்கை தான். வெறுமனே வாயால் பாடுதலோ, புகழ்தலோ, பேசுதலோ அல்ல! நமது அன்பின் செயல்கள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை வைத்துத் தான் நமது வாழ்க்கை அளவிடப்படுகிறது.

சக மனித கரிசனையையும், மனித நேயத்தையும் இயேசு தனது அத்தனை போதனைகளிலும் முன்னிறுத்தினார். நாம் வாழும் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகக் கடமையை அவரது போதனைகள் அடிநாதமாய்க் கொண்டிருக்கின்றன. சக மனிதன் வாழ்வதற்கான ஒரு நல்ல சூழலை உருவாக்கிக் கொடுப்பது நம் கடமை.

சக மனிதனின் மேம்பாட்டுக்கானவற்றைச் செய்வது நம் கடமை. சக மனிதனை நம்மைப் போல நேசிப்பது நம் கடமை! அதற்கு நிலத்தை நேசிப்பது மிக முக்கியம்! வளத்தை மேம்படுத்துவது மிக மிக அவசியம்.

> **செயலற்ற விசுவாசம்**
> **செத்த விசுவாசம்**
> **செயலாற்றும் விசுவாசமே**
> **[மாசற்ற] விசுவாசம்**
>
> **– சாம் ஜெபத்துரை**


www.appamonline.com, www.elimgrc.com
osborne.jebadurai@elimgrc.com, 9003067777

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49 510200000122
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

**Owned & Published by J. Joseph Osborne Jebadurai from 50, Railway Station Road, Kodambakkam, Chennai - 24 and printed by J. Joseph Obsorne Jebadurai at Horeb Art Printers, 50, Railway Station Road, Kodambakkam, Chennai - 24. Editor:- J. Joseph Osborne Jebadurai**

அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். நீதிமொழிகள் 8:17

Elim
GLORIOUS REVIVAL CHURCH

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# அதிகாலை ஆராதனை

நேரடியாக கலந்துகொண்டு
ஆண்டவர் அருளும் ஆசீர்வாதத்தை
பெற்றுக்கொள்ளுங்கள்

**தினமும்**

காலை
**6:15**
மணிமுதல்
**7:15**
மணிவரை

அன்புடன் அழைக்கும்

பாஸ்டர்
**ஆஸ்பார்ன்**
ஜெபத்துரை

- அதிகாலை ஜெபம்
- அதிகாலை ஆராதனை
- அதிகாலை ஸ்தோத்திரபலி

இடம்:

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
எண். 50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம்-24

+91-9003067777, 9884908777, 9884916777




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

**#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India**

**for 24X7 Prayer: 91-9444322200, 9444322211**

**Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com**